# தினபூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 240 ஆடி 19

Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94

திருச்சி, திங்கள், ஆகஸ்ட் 04, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**அமெரிக்காவில் மாயமான இந்தியர்கள் 4 பேர் மரணம்: போலீசார் தீவிர விசாரணை**

....2-ம் பக்கம்

**வாக்காளர் அட்டை விவகாரம்: தேஜஸ்வி யாதவுக்கு மாநில தேர்தல் ஆணையம் நோட்டீஸ்**

...3-ம் பக்கம்

**உடல் தகுதிக்கு இன்னும் டிக் மார்க் கிடைக்கவில்லை: சென்னையில் தோனி பேட்டி**

....6-ம் பக்கம்






விடுதலை போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு நாளை முன்னிட்டு நேற்று, அவரது திருவுருவச்சிலைக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். அருகில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், மு.பெ.சாமிநாதன், சேகர்பாபு, அர.சக்கரபாணி, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

## தூத்துக்குடியில் ரூ.1,119 கோடி மதிப்பிலான புதிய மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்

## முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் பங்கேற்பு

சென்னை, ஆக. 04-

**அரசு முறை பயணமாக இன்று தூத்துக்குடி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், ரூ.1,119.67 கோடியில் அமைக்கப்பட்டுள்ள வின்பாஸ்ட் மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலையை அவர் திறந்து வைக்கிறார். மேலும் அவர் தூத்துக்குடியில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் பங்கேற்கவுள்ளார்.**

**முதல்வர் அடிக்கல்...**

வியட்நாம் நாட்டை சேர்ந்த வின்பாஸ்ட் நிறுவனம் ரூ.16 ஆயிரம் கோடியில், ஆண்டுக்கு 1.50 லட்சம் வாகனங்களை உற்பத்தி செய்யும் வகையில் தூத்துக்குடியில் மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலையை அமைக்க தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

இந்த ஆலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஆண்டு அடிக்கல் நாட்டினார். முதல் கட்டமாக ரூ.1,119.67 கோடி யில் 114 ஏக்கரில் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இதில் 2 பணிமனைகள், 2 கிடங்குகள், கார் பரிசோதனை செய்யும் இடம் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. முதல்கட்ட கார் உற்பத்திக்கான பணிகள் நிறைவடைந்த நிலையில் வி.எப்-6, வி.எப்-7 வகை கார்கள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு தயார் செய்யப்பட்டுள்ளன.

**முதலீட்டாளர்கள் மாநாடு...**

வின்ஃபாஸ்ட் மின்சார கார் தொழிற்சாலை திறப்பு விழா இன்று (ஆக.4) நடைபெறுகிறது. விழாவில் பங்கேற்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து தனிவிமானம் மூலம் இன்று காலை 10 மணிக்கு தூத்துக்குடி விமான நிலையம் வருகிறார். அங்கிருந்து கார் மூலம் வின்பாஸ்ட் ஆலைக்குச் செல் கிறார். அங்கு நடைபெறும் விழாவில் ஆலையை திறந்து வைத்து, கார் விற்பனையை தொட ங்கி வைக்கிறார். தொட ர்ந்து, தூத்துக்குடி மாணிக்கம் மகாலில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார். மாநாட்டில் பல்வேறு தொழில் முதலீடுகள் தொடர்பாக முதல்வர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

**வரவேற்க ஏற்பாடு...**

மேலும், நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. மதியம் 12.45 மணியளவில் தூத்துக்குடி விமான நிலையத்தில் இருந்து தனிவிமானம் மூலம் சென்னைக்கு செல்கிறார். தூத்துக்குடி வரும் முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க திமுக சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதல்வர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் திரளாகப் பங்கேற்குமாறு தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரான அமைச்சர் பெ.கீதாஜீவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வியை பறிக்கும் வகையில்

# குலக்கல்வி முறையை கொண்டு வர மத்திய பா.ஜ.க. அரசு துடிக்கிறது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் குற்றச்சாட்டு

சென்னை, ஆக. 04-

**முன்னாள் முதல்வரும் மறைந்த திமுக தலைவருமான கருணாநிதியின் நினைவுநாளான ஆக. 7 அன்று சென்னையில் அவரது நினைவிடம் நோக்கி நடைபெற உள்ள அமைதி பேரணியில் தொண்டர்கள் கடலென திரள மு.க. ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார். மேலும், ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வியைப் பறிக்கின்ற வகையில் குலக்கல்வி முறையை கொண்டு வர மத்திய பா.ஜ.க. அரசு துடிக்கிறது என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.**

இது தொடர்பாக திமுக தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது., ஆக 7ல் தேதி கருணாநிதி நினைவிடம் நோக்கி நடைபெறும் அமைதிப் பேரணியில் திமுக-வினர் கடலென திரள வேண்டும். மாவட்டங்கள் தோறும் அமைக்கப்பட்டுள்ள கருணாநிதி திருவுருவச் சிலைகளுக்கு அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் மாலையிட்டு மரியாதை செலுத்திட வேண்டும். தி.மு.க., அரசின் திட்டங்களால் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒரு பயனையாவது பெற்று முன்னேற்றம் கண்டு வருவதை நாடறியும்.

கல்வியிலும் சமுதாய முன்னேற்றத்திலும் தனிநபர் வருமானத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்வதை நாம் மட்டும் சொல்லவில்லை, பாஜ அரசின் பொருளாதார ஆய்வறிக்கை மற்றும் பல்வேறு துறைகளின் அறிக்கைகளே உறுதி செய்கின்றன. தமிழகத்தின் நலன் மீது கொஞ்சமும் அக்கறையில்லாத அதிமுக தமிழகத்தை வஞ்சிக்கும் பாஜ உடன் கூட்டணி சேர்ந்து தமிழர்களுக்கு மிகப் பெரும் துரோகத்தை இழைத்து வருகிறது. உண்மையான அதிமுக தொண்டர்களே மனம் புழுங்குகிற வகையில், அடிப்படைக் கொள்கைகள் ஏதுமற்ற எதிர்க்கட்சித் தலைவர் இபிஎஸ் டில்லி வரை சென்று மண்டியிட்டு பாஜ உடன் கூட்டணி சேர்ந்திருக்கிறார்.

நான்காண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் நாள்தோறும் மாநில உரிமைகளுக்கான போராட்டம்தான். முந்தைய அதிமுக ஆட்சியில் நீட் தேர்வு, உதய் மின்திட்டம் , சொத்து வரி உள்ளிட்ட பாஜ அரசின் வஞ்சகத் திட்டங்களுக்கு அடிமை சாசனம் எழுதிக் கொடுத்ததால், தமிழகம் அதன் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. சேராத இடந்தனில் சேர்ந்து தீராத பழி சுமந்தபடி ஊர் ஊராகப் பயணித்து, பொய்களைப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார். 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் 7வது முறையாக திமுக ஆட்சி அமைந்திட உறுதியேற்போம். ஓரணியில் தமிழ்நாடு எனும் மகத்தான முன்னெடுப்பில் மக்களை ஒருங்கிணைத்துக் களத்தில் வெல்வோம்.

இந்தியாவின் முதல் செம்மொழி என்ற தகுதிபெற்ற தமிழுக்கு மிகக் குறைந்த நிதியை ஒதுக்குகிற தமிழர் விரோத பாஜக அரசு, சமஸ்கிருத மொழிக்குப் பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய்களைக் கொட்டிக் கொடுக்கிறது. இந்தி அல்லாத மொழிகளைச் சிதைக்கின்ற வகையில் 'தேசியக் கல்விக் கொள்கை 2020' மூலம் இந்தி மொழியைத் திணிக்க முயற்சிக்கிறது. ஒடுக்கப்பட்ட - பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கின்ற கல்வியைப் பறிக்கின்ற வகையில் குலக் கல்வி முறையைக் கொண்டு வரத் துடிக்கிறது. அறிவியல் பூர்வமாக நிறுவப்பட்ட தமிழர் பண்பாட்டு அடையாளமான கீழடி அகழாய்வு முடிவுகளை மத்திய பாஜக அரசு வெளியிட மறுக்கிறது. ஆரியப் பண்பாட்டை நம் மீது திணிக்கப் பார்க்கிறது.

இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# ஜனாதிபதியுடன் பிரதமர் மோடி சந்திப்பு

புதுடில்லி, ஆக. 04-

**டில்லியில் ஜனாதிபதி திரௌபதி முர்முவை, பிரதமர் மோடி சந்தித்து பேசி உள்ளார். அப்போது பல்வேறு முக்கிய ஆலோசனைகள் நடந்துள்ளது.**

டில்லி ராஷ்டிரபதி பவனில் ஜனாதிபதி திரௌபதி முர்மு உடன் பிரதமர் மோடி சந்தித்து பேசி உள்ளார். வரும் ஆகஸ்ட் 15ம் தேதி நாடு முழுவதும் சுதந்திர தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில் ஜனாதிபதியை சந்தித்து மோடி முக்கிய ஆலோசனை நடத்தியுள்ளார்.

இது குறித்து டில்லி வட்டாரங்கள் கூறியதாவது: ஜனாதிபதியை பிரதமர் மோடி சந்தித்து, சுதந்திர தின விழா கொண்டாட்டம், ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை, வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மற்றும் துணை ஜனாதிபதி தேர்தல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

அதுமட்டுமின்றி ஜனாதிபதியுடன் பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து பிரதமர் மோடி பேசி உள்ளார். இவ்வாறு வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.



## உடல் உறுப்பு மாற்று சிகிச்சையில் சிறப்பான செயல்பாடு:

# தமிழகத்துக்கு மத்திய அரசு விருது

சென்னை, ஆக. 04-

**நாட்டிலேயே உடல் உறுப்பு மாற்று சிகிச்சைகளை திறம்பட மேற்கொண்டதற்காக தமிழக அரசுக்கு விருது வழங்கி மத்திய அரசு கவுரவித்துள்ளது.**

தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று சிகிச்சை அமைப்பு சார்பில் உறுப்பு தான விழிப்புணர்வு நிகழ்வு டெல்லியில் நேற்று நடந்தது. அதில், நாடு முழுவதும் உறுப்பு தான சிகிச்சைகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை சிறப்புற மேற்கொண்ட வர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

இந்திய அளவில் உறுப்பு தான நடவடிக்கைகளில் திறம்பட செயல்பட்ட சிறந்த மாநிலமாக தமிழகம் தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. இந்த விருதை தமிழக உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலர் மருத்துவர் என்.கோபாலகிருஷ்ணனிடம் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா வழங்கினார்.

இந்நிலையில், சென்னையில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம் தொடக்க விழாவில் பங்கேற்ற சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், 'தமிழகத்தின் மகுடத்தில் மற்றுமொரு வைரக் கல்லாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக மாநில உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலர் மருத்துவர் என்.கோபால கிருஷ்ணன் கூறியதாவது: தமிழகத்தில் உறுப்பு தானம் செய்பவர்களின் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று கடந்த 2023-ம் ஆண்டு முதல்வர் அறிவித்தார். அதன் பிறகு, தமிழகத்தில் இதுவரை 479 பேர் உடல் உறுப்பு தானம் அளித்துள்ளனர். அவர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது. கடந்த 2023-ல் 178 பேர் உறுப்பு தானம் செய்தனர். அவர்களிடமிருந்து தானமாக பெற்ற உறுப்புகள் மூலமாக 1,000 பேர் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மறுவாழ்வு பெற்றனர்.

இந்த நடைமுறைகளில் மருத்துவ ரீதியாகவும், சட்ட ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பல்வேறு சிக்கல்களும், சவால்களும் உள்ளன. அனைத்தையும் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை உள்பட தமிழகத்தின் பல அரசு மருத்துவமனைகள் திறம்பட செய்ததால், இந்த சாதனை சாத்தியமாகியுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## காஷ்மீரில் 3-வது நாளாக தேடுதல் வேட்டை:

# 3 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், ஆக. 04-

**காஷ்மீரில் 3வது நாளாக, நேற்று (ஆகஸ்ட் 03) தொடர்ந்து வரும் ஆப்பரேஷன் அகல் நடவடிக்கையில், பயங்கரவாதிகள் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பாதுகாப்பு படை வீரர் ஒருவர் காயம் அடைந்துள்ளார்.**

ஜம்மு - காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் உள்ள அகல் வனப்பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக நம் ராணுவத்துக்கு தகவல் கிடைத்தது. நம் ராணுவத்தினருடன், மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர், காஷ்மீர் போலீசார் இணைந்து, 'ஆப்பரேஷன் அகல்' என்ற பெயரில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது, ஸ்ரீநகர் அருகே டச்சிகாம் தேசிய பூங்கா பகுதியில் பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் திடீரென நம் வீரர்கள் மீது துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு நம் வீரர்களும் அதிரடி தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில், மூன்று பயங்கரவாதிகள் கொல்லப் பட்டனர். இவர்கள் டி.ஆர்.எப்., அமைப்பை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில் நேற்று (ஆகஸ்ட் 03) 3வது நாளாக, ராணுவ தேடுதல் வேட்டையின் போது பயங்கரவாதிகள் 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். பாதுகாப்பு படை வீரர் ஒருவர் காயம் அடைந்துள்ளார். தற்போது நடந்து வரும் ராணுவ நடவடிக்கையில், கொல்லப்பட்ட பயங்கரவாதிகள் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது. தொடர்ந்து அப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடந்து வருகிறது.

## பீகார் மாநில சட்டசபை தேர்தல்:

# இண்டியா கூட்டணி 7-ம் தேதி ஆலோசனை

ஜம்மு, ஆக. 04-

**பீகார் சட்டசபை தேர்தல் குறித்து விவாதிப்பதற்காக வருகிற 7-ம் தேதி இண்டியா கூட்டணியின் ஆலோசனை கூட்டம் டெல்லியில் நடப்பதாக பரூக் அப்துல்லா கூறியுள்ளார்.**

பீகார் சட்டமன்றத் தேர்தல் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் நடைபெற வாய்ப்புள்ளது. அங்கு மீண்டும் ஆட்சியை தக்க வைக்க ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி தீவிர முயற்சியில் ஈடுபட்டு உள்ளது. அதேநேரம் அங்கு ஆட்சியை கைப்பற்ற ராஷ்ட்ரீய ஜனதாதளம் மற்றும் காங்கிரஸ் இணைந்த இண்டியா கூட்டணியும் தீவிரமாக களத்தில் இறங்கி இருக்கிறது.

இந்த தேர்தல் குறித்து விவாதிப்பதற்காக வருகிற 7-ம் தேதி இண்டியா கூட்டணியின் ஆலோசனை கூட்டம் ஒன்று டெல்லியில் நடப்பதாக தேசிய மாநாடு தலைவர் பரூக் அப்துல்லா கூறியுள்ளார்.

ஜம்முவில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர் இது குறித்து கூறுகையில், 'பீகார் தேர்தலிலும் வாக்கு திருட்டு மூலம் வெற்றி பெற பா.ஜனதா திட்டமிட்டு உள்ளதாக ராகுல் காந்தி கூறியுள்ளார். அவரை நான் சந்திக்க உள்ளேன்.

இண்டியா கூட்டணியின் அனைத்து தலைவர்களும் வருகிற 7-ம் தேதி சந்திக்கிறார்கள். அப்போது அவரிடம் இது குறித்து கேட்டு உண்மையை தெரிந்து கொள்வேன்' என்றார்.

## தமிழகத்தில் இன்று கோவை உள்ளிட்ட

# 4 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஆக. 04-

**தமிழகத்தில் கோவை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: 'தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும் குமரி கடலை ஒட்டியுள்ள பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று முதல் ஆக.5-ம் தேதி வரை பெரும்பாலான இடங்களிலும், 7, 8 தேதிகளில் ஒருசில இடங்களிலும், 9-ம் தேதி ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று, கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தேனி, தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

5-ம் தேதி நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் அதிக னமழையும், தேனி, தென்காசி, மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திருப்பத்தூர், வேலூர், ராணிபேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. 6-ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி, தென்காசி,, திருப்பத்தூர் மாவட்டங்களிலும், 7-ம் தேதி கோவை மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -585.67 | -203.00 |
| பாயின்ட் 80,599.91 | பாயின்ட் 24,565.35 |



**தங்கம்** 1 சவரன் ₹74,320 — 1 கிராம் ₹9,290



**வெள்ளி** 1 கிலோ ₹123,000 — 1 கிராம் ₹123.00

**டாலர்** ₹87.20

**பெட்ரோல்** ₹102.63 — **டீசல்** ₹94.24

# அமெரிக்காவில் மாயமான இந்தியர்கள் 4 பேர் மரணம்

## போலீசார் தீவிர விசாரணை

**வாஷிங்டன், ஆக. 04-**

அமெரிக்காவில் மாயமான 4 இந்தியர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தது தெரியவந்துள்ளது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடக்கிறது.



அமெரிக்காவின் நியூயார்க்கில் இருந்து பென்சில்வேனியாவிற்கு சென்ற இந்திய வம்சாவளி குடும்பத்தை சேர்ந்த நான்கு மூத்த குடிமக்கள் காணாமல் போயுள்ளனர்.காணாமல் போனவர்கள் டாக்டர் கிஷோர் திவான்,89, ஆஷா திவான்,85, ஷைலேஷ் திவான்,86, மற்றும் கீதா திவான் 84 என்பது விசாரணையில் தெரியவந்தது. இவர்களை ஹெலிகாப்டர்கள் மூலம் தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இவர்கள் கடைசியாக ஜூலை 29ம் தேதி அன்று, பென்சில்வேனியாவில் உள்ள ஒரு உணவகத்துக்கு சென்றனர். அங்கு பதிவான சிசிடிவி கேமராக்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்திய கிரெடிட் கார்டை வைத்தும் போலீசார் தேடி வந்தனர்.

உணவகம் அருகில் இருந்த இடத்தின் சுற்று வட்டார பகுதிகளிலும் போலீசார் தீவிரமாக சோதனை செய்தனர். அவர்கள் பயணித்த வாகனம் குறித்தும் தேசிய குற்றத்தடுப்பு தகவல் மையத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. அந்நாட்டு நேரப்படி நேற்று இரவு 9:30 மணியளவில் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்கள் பயணித்த வாகனமும் பெருமளவு சேதம் அடைந்து இருந்தது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது. இதன் பிறகு விரிவான அறிக்கை வெளியிடப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## காசாவில் தொடரும் துயரம்;

# கூட்ட நெரிசலில் 48 பேர் பலி

**ஜெருசலேம், ஆக. 04-**

காசா உதவி மையத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, பாலஸ்தீனர்கள் 48 பேர் உயிரிழந்தனர்.



இஸ்ரேல்- ஹமாஸ் படையினர் இடையே நீண்ட நாட்களாக போர் நடந்து வருகிறது. காசாவில் இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இஸ்ரேல் ராணுவ தாக்குதலில், 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா உதவி மையங்களில், நிவாரண பொருட்களுக்காக காத்திருந்த 1000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாகவும், இஸ்ரேல் பசி, பட்டினியை ஆயுதமாக பயன்படுத்துவதாகவும் ஐக்கிய நாடுகள் சபை குற்றம்சாட்டி உள்ளது.

இஸ்ரேல் தாக்குதல் ஒரு பக்கம் மறுபக்கம் காசாவில் உள்ள ஜிகிம் கிராசிங்கில் உள்ள உதவி மையத்தில் ஏற்பட்ட, கூட்ட நெரிசலில் சிக்கி, பாலஸ்தீனர்கள் 48 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 12க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

காசாவின் சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, ஜூன் மாதத்திலிருந்து குழந்தைகள் 89 பேரும், வயதானவர்கள் 65 பேரும் ஊட்டச்சத்து குறைபாட்டால் இறந்துள்ளனர். சர்வதேச நாடுகள், காசாவிற்கு மனிதாபிமான உதவிகளை அனுமதிக்க இஸ்ரேல் மீது அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலுக்கு எதிரான போரை கைவிட மாட்டோம் - ஹமாஸ்

**காசா, ஆக. 04-**

பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கும் வரை இஸ்ரேலுக்கு எதிரான போரை கைவிட மாட்டோம் என்று ஹமாஸ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் - பாலஸ்தீனத்தை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையேயான போர் 2-வது ஆண்டை நெருங்கி உள்ளது. இப்போரில் காசாவில் குழந்தைகள், பெண்கள் உள்பட 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். இப்போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா முயற்சித்து வருகிறது.

இதுதொடர்பான பேச்சு வார்த்தையில் இதுவரை முடிவு எட்டப்பட வில்லை. போர் நிறுத்தம் குறித்த பேச்சுவார்த்தைகளில் ஹமாஸ் அமைப்பினர் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என்று இஸ்ரேல் நிபந்தனை விதித்து உள்ளது. இதற்கிடையே ஹமாஸ் அமைப்பினர் தங்களது ஆயுதங்களை கீழே போட விருப்பத்தை வெளிப்படுத்தியதாக அமெரிக்க அதிபர் டிரம்பின் மத்திய கிழக்கு தூதர் ஸ்டீவ் விட்காப் தெரிவித்தார். ஆனால் அதை ஹமாஸ் திட்டவட்டமாக மறுத்துள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது:-

பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கும் வரை இஸ்ரேலுக்கு எதிரான போரை கைவிட மாட்டோம். ஜெருசலேமை தலைநகராக கொண்ட ஒரு சுயாதீனமான, முழு இறையாண்மை கொண்ட பாலஸ்தீன நாடு நிறுவப்படாதவரை ஆயுதங்களை கீழே போடுவதற்கு நாங்கள் உடன்பட மாட்டோம். எங்களது உரிமையை விட்டுக்கொடுக்க முடியாது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தியதாக ட்ரம்ப் தகவல்

**வாஷிங்டன், ஆக. 04-**

'ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெயை இந்தியா இனி வாங்காது என கேள்விப்பட்டேன், அது உண்மையா பொய்யா என்பது தெரியாது. ஆனால் இது ஒரு நல்ல முடிவு , ' ' என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறினார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஜனவரியில் இரண்டாவது முறை பதவிக்கு வந்ததில் இருந்து சர்வதேச நாடுகளுடனான வர்த்தக பற்றாக்குறையை குறைக்கும் நடவடிக்கையில் இறங்கினார். அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பல நாடுகள், அதே அளவுக்கு இறக்குமதி செய்வதில்லை; அமெரிக்க பொருட்களுக்கு மிக அதிக வரி விதிக்கின்றன என குற்றஞ்சாட்டினார்.

கடந்த ஏப்ரலில் வர்த்தக பற்றாக்குறை உள்ள நாடுகள், அமெரிக்க பொருட்களுக்கு அதிக வரி விதிக்கும் நாடுகளுக்கு எதிராக பரஸ்பர வரி முறையை அறிமுகப்படுத்தினார். அதன் பின் பேச்சு நடத்துவதற்கு வசதியாக அந்த வரியை ஆகஸ்ட் 1ம் தேதி வரை நிறுத்தி வைத்தார். பேச்சு நடத்தி அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்த நாடுகளுக்கு வரியை குறைத்து உத்தரவிட்டார்.

இந்தியா சார்பில் பேச்சு நடந்த போதும், அமெரிக்காவுடன் எந்த முக்கிய ஒப்பந்தமும் இறுதி செய்யப்பட வில்லை. மேலும், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதையும், ராணுவ தளவாடங்களை இந்தியா இறக்குமதி செய்வதையும் அமெரிக்கா எதிர்க்கிறது. இது குறித்து அதிபர் ட்ரம்ப் சமீபத்தில் கூறுகையில், ''உலகிலேயே இறக்குமதிக்கு அதிக வரி விதிக்கும் நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.

' 'மேலும், உக்ரைனில் நடத்தி வரும் போரை ரஷ்யா நிறுத்த வேண்டும் என அனைவரும் வலியுறுத்தி வரும் வேளையில், இந்தியா சீனாவுடன் இணைந்து ரஷ்யாவிடம் இருந்து அதிக அளவு கச்சா எண்ணெயை இறக்குமதி செய்கிறது. இது நல்லதல்ல ' ' என்றார்.

இந்நிலையில், செய்தியாளர்களுக்கு ட்ரம்ப் அளித்த பேட்டியில், ' 'ரஷ்யாவிடம் இருந்து இந்தியா இனி கச்சா எண்ணெய் வாங்காது என தகவல் கிடைத்தது. அது உண்மையா, பொய்யா என்பது தெரியாது. ஆனால் நல்ல முடிவு. என்ன நடக்கிறது என்று பார்ப்போம் என்று கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# குரில் தீவுகளில் 6.7 ரிக்டர் அளவில் கடும் நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை

**குரில் தீவுகள், ஆக. 04-**

ரஷ்யாவிற்கும் ஜப்பானிற்கும் இடையே குரில் தீவுகள் அமைந்துள்ளது. இந்த தீவின் கடல் பகுதியில் நேற்று காலை 11.07 மணியளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.7 ஆக பதிவாகி உள்ளது.

குரில் தீவுகளில் 64 கிலோமீட்டர் ஆழத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் 50.76 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 157.71 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை.

இந்த சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர். முன்னதாக கடந்த 31-ம் தேதி காலை 10.57 மணியளவில் ரிக்டர் 6.5 அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் காரணமாக அப்பகுதிக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ரஷ்யாவில் 500 ஆண்டுகள் கழித்து மீண்டும் சீறத்தொடங்கிய எரிமலை

**மாஸ்கோ, ஆக. 04-**

கம்சட்காவில் கிராஷெனின்னிகோவ் என்ற எரிமலை உள்ளது. இந்த எரிமலையானது கடைசியாக 15ம் நூற்றாண்டில் தான் சீற்றம் கொண்டு வெடித்துச் சிதறியது. அதன்பின்னர் எரிமலையின் சீற்றம் குறைந்து அமைதியாக இருந்து வந்துள்ளது. 500 ஆண்டுகள் கழித்து இந்த எரிமலை தற்போது மீண்டும் வெடித்துச் சிதற ஆரம்பித்துள்ளது. ஒரே இரவில், கிட்டத்தட்ட 6 கிலோ மீட்டர் உயரத்துக்கு சாம்பல் புகை சூழ்ந்தது. எரிமலை வெடித்துச் சிதறியதை அந்நாட்டு அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். அதே நேரத்தில் கடந்த சில நாட்களுக்கு இதே கம்சட்காவில் நிகழ்ந்த சக்திவாய்ந்த நிலநடுக்கங்களின் நீட்சியே இது, பல எரிமலைகள் வெடித்துச் சிதற வாய்ப்பு உள்ளது என்று காலநிலை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

# நடிகர் மதன் பாப் உடல் தகனம்


**சென்னை, ஆக. 04-**

மறைந்த நடிகர் மதன் பாப் உடல் சென்னை பெசன்ட் நகர் மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

நகைச்சுவை நடிகர் மதன் பாப் (71) உடல் நலக்குறைவு காரணமாக சென்னையில் சனிக்கிழமை காலமானார். நகைச்சுவை நடிகரும், நிகழ்ச்சித் தொகுப்பாளருமான மதன் பாப் 'தேவர் மகன்' 'நீங்கள் கேட்டவை', 'துள்ளாத மனமும் துள்ளும்' உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சி தொகுப்பாளர், நிகழ்ச்சி நடுவர் உள்ளிட்டவற்றிலும் பங்கெடுத்து வந்தார். குறிப்பாக, தொலைக்காட்சி ஒன்றில் 'அசத்தப் போவது யாரு?' என்ற நகைச்சுவை நிகழ்ச்சியில் நடுவராக செயல்பட்டார். சென்னை அடையாறில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக உடல் வைக்கப்பட்டது.

அவரது உடலுக்கு திரையுலக பிரபலங்கள், அரசியல் தலைவர்கள், மற்றும் ரசிகர்கள் அஞ்சலி செலுத்தினர். ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், மதன் பாப் உடல் ஊர்வலமாக பெசன்ட் நகர் மின் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய உறவினர்கள் முன்னிலையில் தகனம் செய்யப்பட்டது.

**04-08-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எல்லா வகையிலும் ஏற்றந்தரும் நாள். தனலாபம் அதிகரிக்கும். கல்வியில் வெற்றி கிட்டும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அனைத்தும் நல்லதாக நடக்கும். மனதில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடும்.

**ரிஷபம்:-** இன்று, உங்கள் செயல்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும். சுயநம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும். வாழ்க்கையில் முக்கிய திருப்பங்களை எதிர்பார்க்கலாம்.

**மிதுனம்:-** சிலருக்கு திடீர் பயணங்கள் ஏற்படும், தெய்வபக்தி மேலிடும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். சுகமும் சந்தோஷமும் அதிகரிக்கும்.

**கடகம்:-** சுமாரான நாள், அடக்கி வாசிக்க வேண்டிய நாள். உடல் நிலையில் அக்கறை தேவை, தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பது நல்லது. பணிவோடு இருக்கப் பயன் தரும் நாள்.

**சிம்மம்:-** வாகன யோகம் ஏற்படும். காதல் வயப்படும் நிலை ஏற்படும். பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். தொழில் புரிபவர்களுக்கு இன்று பேச்சே மூலதனமாகும்.

**கன்னி:-** எதிரிகள் அடி பணிவர். ஆரோக்கியம் பெருகும். நல்ல நேரத்தில் நண்பர்கள் கை கொடுப்பர். புதுப் பெண்கள் சிநேகத்தால் துள்ளாத மனமும் துள்ளும். தனவரவு கூடும். பயண சுகம் உண்டு.

**துலாம்:-** இன்று, எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் இகழ்ச்சியே மிஞ்சும். . குழந்தைகளின் உடல் நிலையில் அக்கறை தேவை. பயணத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்:-** அன்னையின் உடல் நிலையில் அக்கறை தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்ய வேண்டிய நாள். வாகன சுகமும் தூக்கமும் குறையும். வியாபாரத்தில் விழிப்புடன் இருக்க வேண்டிய நாள்.

**தனுசு:-** மனத்தெம்பும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும். தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும் நாள். விருப்பங்கள் நிறைவேறும்.

**மகரம்:-** சுமாரான நாள். சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய நாள். படிப்பில் அதிக கவனம் தேவை. அலட்சியம் அல்லல் தரலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தள்ளிப் போடலாம்.

**கும்பம்:-** பெரியோர் நேசம், வாகன யோகம், பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என இராஜயோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும்.

**மீனம்:-** வீண் வம்பை விலைக்கு வாங்காதீர்கள். பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். மாற்றங்கள் நிகழும். மனம் போன போக்கில் அலைய நேரும்.

# எழுச்சி பயணத்திற்கு ஆதரவளிக்கும் தமிழக மக்களுக்கு நன்றி: இ.பி.எஸ்.

**சென்னை, ஆக. 04-**

எழுச்சி பயணத்திற்கு ஆதரவளிக்கும் தமிழக மக்களுக்கு நன்றி தெரிவித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:- கோவை மேட்டுப்பாளையத்தில் தொடங்கிய எனது பயணத்தில், இது வரை 21 நாட்களில், 14 மாவட்டங்கள், 61 சட்டமன்றத் தொகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டுள்ளேன். சுமார் 25 லட்சம் மக்களைப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றேன். அவர்களில் பலரிடம் நேரடியாக உரையாடி அவர்களின் குறைகளை, கோரிக்கைகளை, எண்ணவோட்டங்களைக் கேட்டறியும் வாய்ப்புகள் கிடைத்தன. இந்த பயணத்தில் சுமார் 42 மணி நேரத்திற்கும் மேலாக மக்களிடம் உரையாற்றியுள்ளேன்.

இந்தப் புரட்சிப் பயணத்தில், வெற்றிகரமாக 3,200 கி.மீ. தூரம் பயணித்துள்ளேன். எனது எழுச்சிப் பயணத்திற்கு, செல்லும் இடமெல்லாம் மக்கள் அளித்து வரும் பேராதரவிலும், அவர்களின் அளவற்ற அன்பிலும் மிகுந்த மகிழ்ச்சியுற்றேன். மக்களின் குரலாக, அவர்களில் ஒருவராக என் மீது அன்பு பாராட்டி வரும் தமிழக மக்களுக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்.

எனக்கு அளித்த இந்த வரவேற்புக்கு, தமிழக மக்களாகிய உங்களுக்கு நல்லாட்சியை வழங்குவதே நான் தெரிவிக்கும் நன்றிக்கு நிகரானது. அதுவே எனது கடமை. அதுவே தமிழ் நாட்டு மக்களின் விருப்பமும் கூட. எனது பயணத்தில் - பொதுமக்கள், விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள், தொழிலாளர்கள், தொழில்முனைவோர், வேலையில்லாப் பட்டதாரிகள், குடியிருப்போர் நலச் சங்கத்தினர், வியாபாரிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், சிறுகுறு தொழில் முனைவோர், மருத்துவர்கள், பாட்டாளி வர்க்கத்தினர், மாணவர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், தீப்பெட்டி உற்பத்தியாளர்கள், கடலை மிட்டாய் உற்பத்தியாளர்கள், உப்பு உற்பத்தியாளர்கள், வழக்கறிஞர்கள், ஜல்லிக்கட்டு மாடு வளர்ப்போர், மாடு பிடி வீரர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் ஆகியோரைச் சந்தித்தேன்.

70 ஆண்டுகள் ஆனாலும் இனி திமுக-விற்கு தமிழகத்தில் இடமே இல்லை. ஆகவே, வீட்டிற்குள் உட்கார்ந்து வீரவசனம் மட்டும் பேசினால் போதாது. எங்களைப் போல வீதியில் இறங்கி மக்களைச் சந்தித்துப் பாருங்கள். அப்போதாவது உங்கள் ஆட்சியின் அவல நிலை உங்களுக்குப் புரிகிறதா என்று பார்ப்போம்.

பனை ஏறும் தொழிலாளர்களுக்கு, அவர்கள் பயன்படுத்தும் கத்தி, பதனி இறக்கும் குடுவை போன்ற பொருட்கள் விலையில்லாமல் வழங்கப்படும். அவர்களின் பாதுகாப்பு நலனைக் கருத்தில்கொண்டு காப்பீட்டுத் திட்டத்திற்குள் சேர்க்கப்படுவார்கள். அவர்களுக்கான பிரீமியத் தொகையை அரசே செலுத்தும். மழைக் காலங்களில் பணியில்லாமல் இருக்கும் உப்பளத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

மீன்பிடி தடைக் காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, அவர்கள் கேட்டுக்கொண்ட தற்கிணங்க அதிகப்படுத்தி வழங்கப்படும். உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்துள்ளேன். 2026-ல் கழக ஆட்சி அமைந்தவுடன் இவையெல்லாம் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படும்.

மக்களின் தேவைகளை ஒவ்வொன்றாகப் பார்த்து பார்த்து செய்யும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நல்லாட்சி அமையும். தமிழக மக்கள் ஏற்றம் பெறுவர், அவர்கள் வாழ்வு உயரும். அதுவரை நான் ஓயப்போவதில்லை. எனது எழுச்சிப் பயணம் தொடரும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாமாண்டு பொறியியல் வகுப்புகள் ஆக.18-ல் துவக்கம்

**சென்னை, ஆக. 04-**

பொறியியல் கல்லூரிகளில் முதலாமாண்டு வகுப்புகள் வரும் ஆக. 18 ஆம் தேதி தொடங்கப்படும் என்று அண்ணா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: அண்ணா பல்கலைக்கழகத்தில் கீழ் இயங்கும் பொறியியல் கல்லூரிகளில், பி.இ., பி.டெக். உள்ளிட்ட படிப்புகளில் முதலாமாண்டு மாணவர்களுக்கு வரும் ஆக. 11 ஆம் தேதி வகுப்புகள் தொடங்கப்படும். முன்னதாக ஆக. 5 முதல் ஆக. 9 வரை அறிமுக வகுப்புகள் நடைபெறும்.

அதேபோல், அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் தனியார் பொறியியல் கல்லூரிகளில் முதலாமாண்டு மாணவர்களுக்கு வரும் ஆக. 18 ஆம் தேதி வகுப்புகள் தொடங்கப்படும். முதல் செமஸ்டர் தேர்வுகள் வரும் டிசம்பர் 16 ஆம் தேதி தொடங்கும். தேர்வுகள் நிறைவடைந்த பிறகு, அடுத்த செமஸ்டருக்கான வகுப்புகள் ஜன. 5 ஆம் தேதி தொடங்கப்படும் என்று குறிப்பிடப்பப்பட்டுள்ளது. 3 கட்டங்களாக நடைபெறும் பொறியியல் கலந்தாய்வு ஆகஸ்ட் 23ஆம் தேதியுடன் நிறைவு பெறுகிறது.

# பாகிஸ்தானில் நிலநடுக்கம்: மக்கள் பீதி

**இஸ்லாமாபாத், ஆக. 04-**

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா, பஞ்சாப் மற்றும் இஸ்லாமாபாத் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று அதிகாலையில் நிலநடுக்கம் ஏற்பட்டதால், மக்கள் பீதியடைந்தனர். நிலநடுக்கம் 5.4 ரிக்டர் அளவில் இருந்ததாக பதிவாகி உள்ளது.

தேசிய நில அதிர்வு கண்காணிப்பு மையம் தகவல்களின்படி, இந்த நிலநடுக்கம் நேற்று அதிகாலை 2:04 மணிக்கு 102 கிமீ ஆழத்தில் ஏற்பட்டது. கைபர் பக்துன்க்வாவின் பெஷாவர், ஸ்வாட், மலாகண்ட், நவ்ஷேரா, சர்சத்தா, கரக், திர், மர்தான், முகமது, ஷாங்க்லா, ஹங்கு, ஸ்வாபி, ஹரிபூர் மற்றும் அபோட்டாபாத் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

இஸ்லாமாபாத், ராவல்பிண்டி, லாகூர், அட்டோக், டாக்ஸிலா, முர்ரி, சியால்கோட், குஜ்ரான்வாலா, குஜராத், ஷேக்குபுரா, ஃபெரோஸ்வாலா, முரிட்கே மற்றும் பஞ்சாபின் பிற பகுதிகளிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. அதிகாலையில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் மக்களிடம் பீதியை ஏற்படுத்தியது. இதனால் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். இருப்பினும், இந்த நிலநடுக்கத்தால் உயிர் அல்லது சொத்து இழப்பு எதுவும் ஏற்படவில்லை என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தோனேசியாவில் 20 கி.மீட்டர் உயரம் வெடித்து சிதறிய எரிமலை

## விமானங்கள் பறக்க தடை

**ஜகார்த்தா, ஆக. 04-**

இந்தோனேசியாவில் 20 கிலோமீட்டர் உயரத்துக்கு எரிமலை வெடித்து சிதறியதால் அங்கு விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

பசிபிக் நெருப்பு வளைய பகுதியில் இருப்பதால் இந்தோனேசியாவில் பல எரிமலைகள் அமைந்துள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கது வெவோடோபி நகரில் உள்ள லிவோட்பி எரிமலை. 1,500 மீட்டர் உயரமுள்ள அந்த எரிமலை பிரபலமாக லக்கி லக்கி என அறியப்படுகிறது. எழில் கொஞ்சும் இந்த மலையின் அழகைக் காண வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் படையெடுக்கின்றனர்.

அழகு இருக்கும் இடத்தில் ஆபத்தும் கூடவே இருக்கும் என்பதுபோல அந்த எரிமலை சமீப காலமாக அடிக்கடி வெடித்துச் சிதறுகிறது. அதன்படி லக்கி லக்கி எரிமலை பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதனால் எரிமலையில் இருந்து சுமார் 20 கிலோ மீட்டர் உயரத்துக்கு தீக்குழம்பு வெளியேறியது.

இதனை தொடர்ந்து அடுத்த சில மணி நேரங்களில் மீண்டும் எரிமலை வெடிக்க தொடங்கியது. எனவே அந்த இடம் முழுவதும் கரும்புகை மண்டலமாக காட்சியளித்தது.

இதனால் எரிமலையை சுற்றியுள்ள பகுதியில் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டது. மேலும் எரிமலையில் இருந்து வெளியேறிய சாம்பல் 8 கிலோ மீட்டர் தூரம் வரை ஆறாக ஓடியது. எனவே எரிமலை அருகே உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

இதற்கிடையே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுற்றுலா பயணிகள் வெளியேற்றப்பட்டனர். இதனால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

# சித்தராமையாவுக்கு கன்னடத்தில் பிறந்த நாள் வாழ்த்து கூறிய முதல்வர் ஸ்டாலின்



**சென்னை, ஆக. 04-**

கர்நாடக முதல்வர் சித்தராமையா நேற்று தனது பிறந்தநாளை கொண்டாடினார். அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கன்னட மொழியில் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், கர்நாடக முதல்வர் சித்தராமையா அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள். மொழி உரிமைகளைப் பாதுகாப்பதிலும் சமூக நீதியை முன்னெடுப்பதிலும் உங்கள் வலுவான குரல் உண்மையான கூட்டாட்சி மற்றும் உள்ளடக்கிய ஜனநாயகத்தின் உணர்வைப் பிரதிபலிக்கிறது.

இந்த மதிப்புகள் இன்றைய இந்தியாவில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை; மேலும் அவற்றை நிலைநிறுத்துவதில் தமிழ்நாடு மற்றும் கர்நாடக மக்கள் ஒன்றாக நிற்பார்கள். நீங்கள் தொடர்ந்து வலிமை, மகிழ்ச்சி மற்றும் நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகிறேன் என்று கூறியுள்ளார்.

# தீரன் சின்னமலைக்கு துணை முதல்வர் புகழாரம்



**சென்னை, ஆக. 04-**

விடுதலை போராட்ட வீரர் தீரன் சின்னமலை வழியில் தமிழ் மண்ணில் ஆதிக்கத்தை - அடிமைத்தனத்தை வீழ்த்துவோம் என தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ' ஓடாநிலையில் கோட்டைக்கட்டி ஆண்டு தன் வீரத்தாலும் - தியாகத்தாலும் கோடானு கோடி மக்கள் மனதில் நிலைத்திருக்கும் மாவீரர் தீரன் சின்னமலையின் நினைவு நாள் இன்று.

அடிமைத்தனமே தோல்விக்கான தொடக்கப்புள்ளி என ஆதிக்கத்துக்கு அடிபணிய மறுத்து அந்நிய படையை விரட்டியடித்த தன்னிகரில்லா வீரத்துக்குச் சொந்தக்காரர். மண் காக்க, மக்கள் மானம் காக்க போரிட்டு உயிர்நீத்த தீரன் சின்னமலை நினைவைப் போற்றுவோம். அவர் வழியில் தமிழ் மண்ணில் ஆதிக்கத்தை - அடிமைத்தனத்தை வீழ்த்துவோம்' எனத் தெரிவித்துள்ளார்.

# தீரன் சின்னமலை திருவுருவ படத்துக்கு இ.பி.எஸ். மரியாதை




**சென்னை, ஆக. 04-**

விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் திருவுருவப் படத்துக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதுகுறித்து அ.தி.மு.க. சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், ' அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி திருநெல்வேலியில் இன்று (நேற்று) சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 220-ஆவது நினைவு நாளை முன்னிட்டு, அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், ' ஆங்கிலேய அடக்குமுறைக்கு எதிராக பெரும் படையை கட்டமைத்து, நம் தாய் மண்ணின் விடுதலைக்காக சமரசமற்ற போர்களை முன்னெடுத்து, அந்நியப் படைகளுக்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்த சுதந்திரப் போராட்ட வரலாற்றின் மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளில் அவரின் தியாகத்தையும், வீரத்தையும் போற்றி வணங்குகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# ஓ.பன்னீர்செல்வத்தை குறை கூற மாட்டேன்: நயினார் நாகேந்திரன்

**பவானி, ஆக. 04-**

என்னையோ எனது உதவியாளரையோ ஓ.பி.எஸ். அழைக்கவில்லை. ஓ.பி.எஸ். என்னைப் பற்றி குறை கூறுகிறார்; நான் அவரைப்பற்றி குறை கூற மாட்டேன் என தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பா.ஜ.க. கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக ஓ.பி.எஸ். அறிவித்திருந்தார். பிரதமரை சந்திக்கும் வாய்ப்பு இல்லை என்ற அதிருப்தியில் ஓ.பி.எஸ். கூட்டணியில் விலகியதாக பரபரப்பாக பேசப்பட்டது. இதற்கிடையே, நிருபர்களிடம் ஓ.பி.எஸ். என்னை தொடர்பு கொண்டு இருந்தால் பிரதமரை சந்திக்கும் வாய்ப்பை உருவாக்கி கொடுத்து இருப்பேன் என நயினார் நாகேந்திரன் கூறியிருந்தார்.

பிரதமரை சந்திப்பது தொடர்பாக பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கூறிய கருத்துக்கு பதிலளித்து ஓ.பி.எஸ். அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில், அவர் '' 6 முறை போனில் தொடர்புகொண்டும் நயினார் நாகேந்திரன் அழைப்பை எடுக்கவில்லை '' என்று முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். கூறியிருந்தார்.

இது தொடர்பாக நேற்று (ஆகஸ்ட் 03) ஈரோடு மாவட்டம், பவானியில் நிருபர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: கடிதம் அனுப்பி இருக்கிறார் என்று சொன்னது எனக்கு தெரியவில்லை. அந்த கடிதம் இன்னும் வந்து சேரவில்லை. அவர் கடிதம் வந்து சேர்ந்தால் கண்டிப்பாக நான் உங்களுக்கு எடுத்து காட்டுகிறேன். அப்போது யார் உண்மையை சொல்லி இருக்கா, யார் பொய் சொல்லி இருக்கா என்பது உங்களுக்கு தெரியும்.

தமிழக முதல்வரை எடுத்த உடனே பார்த்து பேசிட முடியாது. ஏற்கனவே அவருடன் தொடர்பு இருந்திருந்தால் தான் இந்த மாதிரி முடிவு எடுத்து இருக்க முடியும் என்பது எல்லோருடைய கருத்தாக இருக்கிறது. ஓ.பி.எஸ். என்னை தொடர்பு கொள்ளவில்லை. நான் தான் அவரை தொடர்பு கொண்டேன். முதல்வர் ஸ்டாலினை சந்திப்பதற்கு முதல் நாள் நான் அவரை தொடர்பு கொண்டேன். இது முன்னாடி சட்டசபை நடக்கும் போது, பலமுறை அழைத்து இருக்கிறேன். எனது உதவியாளர் நான் கூறி பலமுறை அழைத்து இருக்கிறார்கள். அவர் ஒரு குறையாக சொல்லி இருக்கிறார். நான் அவரை பற்றி குறை சொல்லமாட்டேன். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.

பிரதமரை சந்திப்பது பற்றி நயினார் நாகேந்திரனுக்கு கடந்த ஜூலை 14 மற்றும் ஏப் 12 ஆகிய தேதிகளில் அனுப்பிய குறுஞ்செய்தியை முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். நிருபர்கள் சந்திப்பில் காண்பித்தார்.

# கவின் தந்தைக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு

**தூத்துக்குடி, ஆக. 04-**

நெல்லையில் கொல்லப்பட்ட ஐ.டி. ஊழியர் கவின்குமார் தந்தைக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகமங்கலத்தை சேர்ந்த இளைஞர் கவின்குமார். இவர் சென்னையில் உள்ள ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். இதனிடையே, கவின்குமார் கடந்த 27ம் தேதி நெல்லை பாளையங்கோட்டையில் படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் சுர்ஜித் என்பவரையும், அவரது தந்தையான எஸ்.ஐ.சரவணனையும் போலீசார் கைது செய்தனர். கவின்குமார் கொலை வழக்கை சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரித்து வருகின்றனர்.

இதனிடையே, கவின்குமாரின் தந்தை சந்திரகுமாரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக உறவினர்கள் குற்றஞ்சாட்டி வந்தனர். மேலும், அவருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் போலீசில் மனு கொடுக்கப்பட்டது.

இந்நிலையில், கவின்குமாரின் தந்தைக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. சந்திரகுமாருக்கு 24 மணிநேரமும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# தேஜஸ்வி யாதவுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ்

**புதுடெல்லி, ஆக. 04-**

இரண்டு வாக்காளர் அடையாள அட்டைகள் வைத்திருந்தது தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு தேஜஸ்வி யாதவிற்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

பீகார் மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதையொட்டி, அங்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணி நடைபெற்றது. ஒரு மாத காலமாக நடந்த திருத்தப் பணி முடிந்த நிலையில், நேற்று தேர்தல் ஆணையம் பீகாருக்கான வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டது.

இந்நிலையில், ராஷ்ட்ரிய ஜனதா தள மூத்த தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான தேஜஸ்வி யாதவ், வரைவு வாக்காளர் பட்டியலில் என்னுடைய பெயர் விடுபட்டுள்ளது. இதனால், நான் தேர்தலில் போட்டியிட முடியாத சூழல் ஏற்படும். என்றார். இந்தக் குற்றச்சாட்டை தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில், ''தேஜஸ்வி யாதவ் கூறிய குற்றச்சாட்டு தவறானது. வரைவு வாக்காளர் பட்டியலில், 204-வது வாக்குப் பதிவு மையத்தில் 416-வது வரிசை எண்ணில் தேஜஸ்வியின் பெயர் இடம் பெற்றுள்ளது என்று கூறியது.

இந்நிலையில், இரண்டு வாக்காளர் அடையாள அட்டைகள் வைத்திருந்தது தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு தேஜஸ்வி யாதவிற்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இது தொடர்பாக தேர்தல் ஆணையம் அளித்த நோட்டீசில் கூறப்பட்டுள்ளதாவது: முதல் கட்ட விசாரணையில், நீங்கள் காட்டிய வாக்காளர் அடையாள அட்டை எண் அதிகாரப்பூர்வமாக வழங்கப்படவில்லை எனத் தெரிகிறது. எனவே, உங்கள் அடையாள அட்டையின் அசலை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அப்போதுதான் முழுமையாக விசாரிக்க முடியும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக வாக்காளர்களாக 6.50 லட்சம் பீகாரிகள்: ப.சிதம்பரம் கண்டனம்

**சென்னை, ஆக. 04-**

பீகாரை சேர்ந்த 6.50 லட்சம் பேரை தமிழக வாக்காளர்களாக சேர்ப்பது ஆபத்தானது என்று ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

பீகாரில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப்பணியை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இதில், பீகாரில் இருந்து வெளி மாநிலங்களுக்கு புலம்பெயர்ந்துள்ள 36 லட்சம் பேரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

நீக்கப்பட்ட பீகாரிகள், தற்போது வேலை நிமித்தமாக புலம்பெயர்ந்துள்ள தமிழகம், ஆந்திரா, கர்நாடகா போன்ற வெளிமாநிலங்களில் வாக்குரிமை வழங்க தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதன் மூலம் தமிழகத்தில் வசித்து வரும் புலம்பெயர்ந்த பீகாரிகள் 6.50 லட்சம் பேருக்கு தமிழகத்தில் வாக்குரிமை வழங்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில், பீகாரை சேர்ந்த 6.50 லட்சம் பேரை தமிழக வாக்காளர்களாக சேர்ப்பது ஆபத்தானது என்று காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய மந்திரியுமான ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், பீகாரில் நடைபெற்றுவரும் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப்பணியால் 65 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கும் உரிமையை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளபோது, பீகாரை சேர்ந்த 6.50 லட்சம் பேரை தமிழக வாக்காளர்களாக சேர்க்கப்பட உள்ளதாக வெளியான தகவல் ஆபத்தானது மட்டுமின்றி சட்டவிரோதமானது. மேலும், இது தமிழக வாக்காளர்கள் அவர்களின் அரசை தேர்ந்தெடுக்கும் உரிமையில் தலையிடுவதாகும்.

மாநில தேர்தலின்போது புலம்பெயர் தொழிலாளர்கள் அவர்களின் சொந்த ஊரான பீகாருக்கு ஏன் செல்லக்கூடாது? வழக்கமாக அவ்வாறுதானே நடைமுறை உள்ளது. சாத் பூஜை விழாவின் போது பீகாரை சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்லவில்லையா?

இந்திய தலைமை தேர்தல் ஆணையம் அதன் அதிகாரங்களை தவறாக பயன்படுத்தி மாநிலங்களின் தேர்தல் தன்மை மற்றும் முறைகளை மாற்ற முயற்சிக்கிறது. இந்த அதிகார துஷ்பிரயோகத்தை எதிர்த்து அரசியல் ரீதியிலும், சட்டரீதியிலும் போராட வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக அனைத்து கட்சி கூட்டம்
## திருமாவளவன் வலியுறுத்தல்

**சென்னை, ஆக. 04-**

வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் தொடர்பாக அனைத்து கட்சி கூட்டத்தை முதல்வர் ஸ்டாலின் கூட்ட வேண்டும் என திருமாவளவன் வலியுறுத்தி உள்ளார்.

சென்னையில் நிருபர்கள் சந்திப்பில் திருமாவளவன் கூறியதாவது:

தமிழகத்தில் சனாதனமயமாக்க பா.ஜ.க. முயன்று வருகிறது. பா.ஜ.க.விற்கு உறுதுணையாக தமிழகத்தில் உள்ள சில கட்சிகளும் உள்ளன. பா.ஜ.க. தமிழக கட்சிகளுடன் இணைந்து நடமாட தொடங்கிய பின் ஆணவ கொலைகள் அதிகரித்துள்ளது. கவின் ஆணவ கொலை தொடர்பாக உயர்நீதிமன்ற கண்காணிப்பில் விசாரணை நடத்த வேண்டும். நெல்லை ஆணவ படுகொலையை கண்டித்து பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். பேசவில்லை. ஏதும் கண்டனம் தெரிவிக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் கண்டனத்திற்கு உள்ளாகி வருகிறது. வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் பற்றி விவாதம் நடத்த கூட மத்திய அரசு தயாராக இல்லை. பீகாரில் 65 லட்சம் பேரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கியிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

வட மாநிலத்தை சேர்ந்த 80 லட்சம் பேர் தமிழகத்தில் குடியேறி உள்ளனர். அவர்களை எல்லாம் இங்கே வாக்காளர்களை சேர்க்கும் முயற்சியும் அவர்களது செயல்திட்டத்தில் இருப்பதாக சொல்லபடுகிறது.

எனவே இது குறித்து தமிழக முதல்வர் ஸ்டாலின் ஒரு விரிவான விவாதத்தை நடத்த அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று விசிக வேண்டுகோள் விடுக்கிறது. இவ்வாறு திருமாவளவன் கூறினார்.

# வனப்பகுதிக்குள் ஆடு, மாடுகளை மேய்த்து சீமான் நூதன போராட்டம்

**தேனி, ஆக. 04-**

தேனி மாவட்டம் முந்தல் பகுதியில், கால்நடை மேய்ச்சல் நில உரிமை கோரி, போலீசாரின் தடையை மீறி விவசாயிகளுடன் இணைந்து சீமான், வனப்பகுதிக்குள் ஆடு, மாடுகளை மேய்த்து நூதன போராட்டம் நடத்தினார்.

தேனி மாவட்டம் போடி, முந்தல் அருகே அடவுப்பாறையில் நாம் தமிழர் கட்சி சார்பில் மலையேறி மாடு மேய்க்கும் போராட்டம் நடந்தது. இந்த போராட்டத்தில் பங்கேற்ற சீமான் பேசியதாவது: இலங்கையில் எங்களை குண்டு போட்டு கொன்றார்கள், அது இனப்படுகொலை. இங்கு குடிக்க வைத்து கொல்கிறான், இதுவும் இனப்படுகொலை. அவன் ஒன்றரை லட்சம் பேரை ஒரே ஆண்டில் கொன்றான். இவர்கள் 5 லட்சம் பேரை 5 ஆண்டில் கொல்கிறார்கள். இரண்டும் ஒன்றுதான். இந்த நாட்டை உலகத்தின் தலை சிறந்த நாடாக, பூமியின் சொர்க்கமாக மாற்றி படைப்போம். 5 ஆண்டுகளில் ஆக சிறந்த நாடாக மாற்றுவேன். அவ்வளவு திட்டங்கள், சிந்தனைகள் எல்லாம், கோடி கனவுகள் கொண்டோம். அதனை நிறைவேற்ற கூடி வாருங்கள், ஓடி வாருங்கள் என் மக்களே. அவங்களுக்கு தெரியாது. ஆடு, மாடு என்றால் என்ன என்று நினைத்து கொண்டு இருக்கிறான். ஆடு, மாடுகள் மேய்ப்பது தொழில்முறைகள் அல்ல; எங்களது வாழ்க்கை முறை, கலாசாரம், பண்பாடு.

மாட்டுப்பொங்கல் என்று கொண்டாடிய பரம்பரை நாங்கள். கூரிய கொம்புகள் இருப்பதை மறந்து மாடுகள் வண்டி இழுத்துக் கொண்டிருக்கின்றன; மாடுகளுக்கு போராட தெரியவில்லை. மேய்ச்சல் நிலம் என்பது எங்களது உரிமை. ஜாதி, மதம் கொடிய நோய், அது நம்மை பிரிக்கும். ஆனால் மொழி உணர்வே நம்மை இணைக்கும். இவ்வாறு சீமான் பேசினார்.

# உ.பி.யில் கால்வாயில் கார் கவிழ்ந்து 11 பேர் பரிதாப பலி



**லக்னோ, ஆக. 04-**

உத்தர பிரதேசத்தில் கால்வாயில் கார் கவிழ்ந்த விபத்தில் 11 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

உத்தரபிரதேச மாநிலம் கோண்டாவில் கால்வாயில் கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 11 பேர் உயிரிழந்தனர். 15 பேருடன் சென்ற கார் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து கால்வாயில் கவிழ்ந்து விபத்து நிகழ்ந்துள்ளது என்பது விசாரணையில் தெரியவந்தது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் இரங்கல் தெரிவித்துள்ளார். இது குறித்து சமூக வலைதளத்தில், அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: கோண்டா மாவட்டத்தில் நடந்த துரதிர்ஷ்டவசமான விபத்தில் ஏற்பட்ட உயிர் இழப்பு மிகவும் வருத்தமளிக்கிறது. துயரத்தில் இருக்கும் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்து கொள்கிறேன்.

இந்த விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம் நிதி உதவி வழங்கவும், காயம் அடைந்தவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உரிய சிகிச்சை அளிக்க மாவட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். இறந்தவர்கள் ஆன்மா சாந்தி அடையவும், காயமடைந்தவர்கள் விரைவாக குணமடையவும் ராமரைப் பிரார்த்திக்கிறேன். ஓம் சாந்தி. இவ்வாறு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

**மரம் மனிதனின் உரம்**

## உடல் மண்ணுக்கு...
# உயிர் அ.தி.மு.க.வுக்கு: ஜெயக்குமார் பேட்டி

**சென்னை, ஆக. 04-**

என் உடலில் அ.தி.மு.க. ரத்தம் தான் ஓடுகிறது. உடல் மண்ணுக்கு உயிர் அ.தி.மு.க.வுக்கு. இதுதான் எங்களுடைய கொள்கை என்று ஜெயக்குமார் கூறினார்.

சென்னை திருவான்மியூரில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- நான் அ.தி.மு.க.வில் இருந்து விலகி தி.மு.க.வில் இணையப் போவதாக வதந்தி பரப்பி வருகிறார்கள். என்னை குறித்து வதந்தி பரப்பிய யூடியூபர்களுக்கு நிறைய வருமானம் வந்தால் எனக்கு மகிழ்ச்சி தான். நடக்காத ஒருவிஷயம்.. எதிர்பார்ப்பவர்களுக்கு அது ஏமாற்றம் தரும் விஷயம். முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கே தெரியும் நான் மானஸ்தன் என்பது. பதவிக்காக யார் வீட்டு வாசலிலும் நான் நிற்கமாட்டேன்.

திராவிட பாரம்பரியத்தில் வந்தவர்கள்.. பெரியார் வழியில்... அண்ணா வழியில்... அண்ணாவிற்கு பிறகு புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் வழியில் வந்த நான் அவ்வாறு இருக்க மாட்டேன். என் உடலில் அ.தி.மு.க. ரத்தம் தான் ஓடுகிறது. உடல் மண்ணுக்கு உயிர் அ.தி.மு.க.வுக்கு. இதுதான் எங்களுடைய கொள்கை.

ஓபிஎஸ் உள்ளிட்ட விவகாரம் தொடர்பாக பொதுச்செயலாளரே விளக்கம் கொடுத்துவிட்டார். அதுவே போதுமானது. ஒன்றிணைவோம் வா திட்டத்தில் தங்க தமிழ்ச்செல்வன், எம்.எல்.ஏ. மகாராஜனையே இணைக்க முடியவில்லை; இவர்கள் ( தி.மு.க.) எப்படி மக்களை ஒன்று சேர்ப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# கூட்டணி குறித்து பேசினால் ஒழுங்கு நடவடிக்கை: ஓ.பி.எஸ். எச்சரிக்கை



**சென்னை, ஆக. 04-**

கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கூட்டணி குறித்து பேசினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஓ.பி.எஸ். உத்தரவிட்டுள்ளார்.

அவரது அறிக்கை; அ.தி.மு.க. ஜெயலலிதாவின் மறைவிற்குப் பிறகு, தொடர் தோல்விகளை சந்தித்து மக்களின் நம்பிக்கையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறது. அ.தி.மு.க.வை துரோகக் கூட்டத்திடமிருந்து மீட்டெடுப்பதற்காக அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவை ஏற்படுத்தி நாம் போராடி வருகிறோம். இதில் நீதிமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் நமக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், வருகின்ற சட்டசபை பொதுத் தேர்தலை நாம் எதிர்கொள்ளும் வகையில், எம்.ஜி.ஆரால் நிகழ்த்தப்பட்ட சாதனைகளையும், ஜெயலலிதாவால் நிகழ்த்தப்பட்ட சாதனைகளையும் பட்டி தொட்டி எங்கு எடுத்துச் செல்லவும், தி.மு.க. ஆட்சியில் தற்போது மக்கள் சந்தித்து வரும் பிரச்னைகள் மற்றும் தமிழகத்திற்கு எதிரான மத்திய அரசின் செயல்பாடுகளை மக்களிடம் எடுத்துச் செல்லவும், அ.தி.மு.க. அழிவுப் பாதையில் அழைத்துச் செல்லப்படுவதை மக்களுக்கு எடுத்துக் காட்டவும் பொதுக் கூட்டங்களை கட்சி நிர்வாகிகள் நடத்த வேண்டும்.

மேலும், தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்கும் செய்தித் தொடர்பாளர்கள், கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கூட்டணி குறித்து எந்தக் கருத்தையும் தெரிவிக்க வேண்டாம். இதனை மீறிச் செயல்படுபவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டணி குறித்த முடிவு கட்சி தலைமை நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்டவர்களின் கருத்தினைக் கேட்டு, கள நிலவரத்தை ஆராய்ந்து, அதற்கேற்ப தக்க நேரத்தில் உரிய முடிவு எடுக்கப்படும், இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தலைவர்கள் சொல்வதை படிங்க....**



திருப்பூர், ஈரோடு போன்ற இடங்களுக்கு வடமாநிலங்களில் இருந்து ஏராளமான தொழிலாளர்கள் தமிழகத்துக்கு வருகின்றனர். வெளி மாநில தொழிலாளர்கள் படிப்படியாக முதலாளியாக மாறி வருகிறார்கள். வெளி மாநிலத்தவரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றால் ஒரு காலத்தில் நாம் தமிழகத்தில் இருந்து விரட்டப்படுவோம்.

\- சீமான்



ஓ.பன்னீர்செல்வம் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறி இருக்கிறார். அவரது ஆதங்கம் என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். அவரை எங்கள் கூட்டணிக்கு மீண்டும் கொண்டு வர டெல்லியில் உள்ள பா.ஜ.க. தலைவர்கள் முயற்சி எடுக்க வேண்டும் அவர் தனது முடிவை மாற்றிக் கொண்டு மீண்டும் தே.ஜ. கூட்டணிக்கு வரவேண்டும்.

\- டி.டி.வி.தினகரன்



அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி இயற்கையிலேயே ஏற்றுக் கொள்ள முடியாத கூட்டணி. கட்சித் தலைவர்களையே இழிவு படுத்தி பேசக்கூடிய பா.ஜ.க.வுடன், தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிக்கொள்ள எடப்பாடி பழனிசாமி கூட்டணி அமைத்துக் கொண்டிருக்கிறார். எனவே அவர் சொல்வதை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

\- செல்வப்பெருந்தகை



இந்த முறை யாருடனும் இன்னும் கூட்டணி உறுதியாகவில்லை. திட்டுவதும் குறை சொல்வதும் மட்டுமே அரசியல் இல்லை. என்னுடைய பிரசாரம் இந்த முறை வேறு மாதிரி வித்தியாசமாக இருக்கப் போகிறது. நாங்கள் எங்கு கூட்டணி அமைக்கிறோமோ, அந்தக் கூட்டணி மகத்தான வெற்றி பெறும். எங்கள் பிரசாரம் அதை நோக்கியே இருக்கும்.

\- பிரேமலதா

# பெரம்பலூர் மாவட்ட பொதுமக்களின் வசதிக்காக, 5 புதிய பேருந்துகள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்



**பெரம்பலூர்,ஆக.04-**

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பெரம்பலூர் பணிமனைக்குட்பட்ட ஐந்து புதிய பேருந்துகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் (03.08.2025) கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வுகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிற்கே முன்னோடி முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்கின்றார். நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்களைப் பார்த்து அண்டை மாநிலங்களும், வெளிநாடுகளும் செயல்படுத்தி வருவது மிகவும் பெருமைக்குரியதாகும். தமிழ்நாட்டுப் பெண்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையச்செய்யும் உயர்ந்த நோக்கத்தோடு முதலமைச்சர் மகளிருக்கான விடியல் பேருந்து பயண திட்டத்தை செயல்படுத்தி உள்ளார்கள். ஏழை எளிய மக்களின் போக்குவரத்து செலவினை குறைக்கும் வகையில் நமது மாநிலத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றது. மேலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காகவும் எரிபொருள் சேமிப்பிற்காகவும் இயற்கை எரிவாயு மூலமாக இயங்கக்கூடிய சி என் ஜி பேருந்து சேவையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அரசுப் பேருந்துகள் நவீன மயமாக்கப்பட்டு பொதுமக்கள் வசதிக்கேற்பவும், தேவைகளுக்கேற்பவும் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு வரப்படுகிறது

அதனடிப்படையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் லிமிடெட், திருச்சி மண்டலம், பெரம்பலூர் பணிமனை குட்பட்ட 5 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வந்த பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகவும், வசதிக்காகவும், தலா ரூபாய் 43 லட்சம் மதிப்பீட்டிலான பி.எஸ் 6 புதிய பேருந்துகளாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது அதன்படி அரியலூரில் புறப்பட்டு பெரம்பலூர் வழியாக புதிய பேருந்து நிலையத்தில் 02.20மு.ப மணிக்கு ஒரு பேருந்தும், 10.35 மு.ப மணிக்கு ஒரு பேருந்தும் என இரண்டு 02 பேருந்துகள் சென்னை கிளாம்பாக்கத்திற்கும், பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் 09.30. மு.ப. மணிக்கும், 11.40.மு.ப. மணி என 02 பேருந்துகள் விழுப்புரம் வழியாக சென்னை கிளாம்பாக்கத்திற்கும், ஆத்தூர் முதல் மதுரை செல்லும் பேருந்து பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து 08.45 மு.ப. மணிக்கு திருச்சி வழியாக செல்லும் வகையில் புதிய பேருந்து சேவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த பேருந்துசேவைகளை பொதுமக்கள் பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் கோட்டாட்சியர் (பொ) சக்திவேல், அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜ்குமார், துரைசாமி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக திருச்சி மண்டல பொது மேலாளர் டி சதீஷ்குமார், பெரம்பலூர் கோட்ட துணை மேலாளர் (தொழில்நுட்பம்) எம்.எஸ்.ஜி.புகழேந்தி ராஜ், கோட்ட மேலாளர் ராம்குமார், பெரம்பலூர் கிளை மேலாளர் தண்டாயுதபாணி, முன்னாள் அரசு வழக்கறிஞர் ராஜேந்திரன் மற்றும் போக்குவரத்துத் துறை பணியாளர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ.218.11 லட்சம் மதிப்பீட்டில்11 திட்டப்பணிகள்

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டினார்



**புதுக்கோட்டை,ஆக.04-**

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு சாலைப் பணிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (02.08.2025) அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புற பகுதிகளை முன்னேற்றிடும் வகையில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் கிராமப்புறங்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, சாலை வசதி, சுகாதார வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றைய தினம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு சாலைப் பணிகள் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், குளமங்கலம் தெற்கு ஊராட்சியில் ரூ.26.23 லட்சம் மதிப்பீட்டில் படிமாத்தான் குடியிருப்பு முதல் மறமடக்கி வரை உள்ள இணைப்பு சாலையினையும், குளமங்கலம் வடக்கு ஊராட்சியில் ரூ.18.43 லட்சம் மதிப்பீட்டில் குளமங்கலம் வடக்கு பள்ளிகொண்டான் தெரு சாலையினையும், பனங்குலம் ஊராட்சியில் ரூ.27.30 லட்சம் மதிப்பீட்டில் மழவராயன் தெரு சாலையினையும், நகரம் ஊராட்சியில் ரூ.17.90 லட்சம் மதிப்பீட்டில் தெற்கு மகாராஜ தெரு சாலையினையும், செரியாலூர் இனாம் ஊராட்சியில் ரூ.34.07 லட்சம் மதிப்பீட்டில் செரியாலூர் இனாம் ஆதிதிராவிடர் பகுதியில் உள்ள சாலையினையும், ஆலங்காடு ஊராட்சியில் ரூ.9.75 லட்சம் மதிப்பீட்டில் தொண்டைமான் குடியிருப்பு சாலையினையும், கல்லாலங்குடி ஊராட்சி, ஸ்டாலின் நகரில் ரூ.14.28 லட்சம் மதிப்பீட்டில் ஐ.டி.பி.ஐ வங்கி சாலையினையும், வடகாடு ஊராட்சியில் ரூ.13.54 லட்சம் மதிப்பீட்டில் தோழன்பட்டி சாலையினையும், ரூ.18.67 லட்சம் மதிப்பீட்டில் வடகாடு முஸ்லீம் பேட்டை சாலையினையும், ரூ.11.03 லட்சம் மதிப்பீட்டில் வடகாடு கல்லுக்கொல்லை சாலையினையும், மாங்காடு ஊராட்சியில் ரூ.26.91 லட்சம் மதிப்பீட்டில் உசிலங்கொல்லை சோம்பியத்தெரு இணைப்பு சாலையினையும் என மொத்தம்; ரூ.218.11 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலைகளாக அமைக்கும் 11 பணிகள் இன்றையதினம் அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகள் அனைத்தையும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டது.

எனவே தமிழக அரசின் சார்பில் பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்பட்டுவரும் இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார். இந்நிகழ்ச்சிகளில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முத்துராமன், ரமேஷ், ஆலங்குடி வட்டாட்சியர் வில்லியம் மோசஸ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர்; கலந்துகொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை அருகே திருமங்கலக்குடி அஸ்சலாம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக நகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை அமைச்சர்கள் கோவி.செழியன், சி.வி.கணேசன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள். மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், துணை மேயர் சுப.தமிழழகன், சார் கலெக்டர் ஹிருத்யா எஸ்.விஜயன், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) இரா.அருணகிரி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# ஸ்ரீ ராம் இலக்கியக் கழகம் சார்பில் திருச்சியில் நடைபெற்ற பள்ளி-கல்லூரி மாணவர்களுக்கான திருக்குறள் போட்டி

## 252 மாணவர்கள் பங்கேற்று சாதனை



**திருச்சி,ஆக.04-**

திருச்சியில், ஸ்ரீராம் இலக்கியக் கழகம் நடத்திய பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கு இடையேயான திருக்குறள் பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டிகளில் 252 மாணவர்கள் பங்கேற்று சாதனை புரிந்தனர். அண்மையில் (ஜூலை 26 அன்று) திருச்சி, இ.ஆர். மேல்நிலைப் பள்ளியில், ஸ்ரீ ராம் இலக்கியக் கழகம், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான திருக்குறள் பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டிகளை நடத்தியது. இதில் ஓவியப் போட்டியில் இடைநிலைப் பிரிவில் 68 மாணவர்களும், மேல்நிலைப் பிரிவில் 42 மாணவர்களும் ஆக மொத்தம் 110 மாணவர்கள் கலந்து கொண்டனர். பேச்சுப் போட்டியில் இடைநிலைப் பிரிவில் 51 மாணவர்களும், மேல்நிலைப் பிரிவில் 32 மாணவர்களும், கல்லூரிப் பிரிவில் 9 மாணவர்களும், ஆக மொத்தம் 92 மாணவர்கள் கலந்து கொண்டனர். கட்டுரைப் போட்டியில், இடைநிலைப் பிரிவில் 20 மாணவர்களும், மேல்நிலைப் பிரிவில் 28 மாணவர்களும், கல்லூரி பிரிவில் 2 மாணவர்களும் என மொத்தம் 50 மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியின் நிறைவு விழாவில், இ. ஆர். மேல்நிலைப் பள்ளியின் செயலாளர் ஆர். ராகவன் வாழ்த்துரை வழங்கினார். இ. ஆர். மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் ரமேஷ் குமார் முன்னிலை வகித்தார். முன்னதாக, ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனத்தின் முதுநிலை கோட்ட மேலாளர் மு. விஜய் வரவேற்புரை ஆற்றினார். தொடர்ந்து, ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனத்தின் துணைப் பொது மேலாளர் கே. பசுபதி தலைமை உரை ஆற்றினார்.

# கும்பகோணம் கார்த்தி வித்யாலயா பள்ளியில் மாவட்ட அளவிலான சிலம்பாட்ட போட்டி



**சுவாமிமலை,ஆக.04-**

கும்பகோணம் கார்த்தி வித்யாலயா பள்ளியில் நேற்று மாவட்ட அளவிலான சிலம்பம் போட்டியானது நடைபெற்றது. இப் போட்டியில் கும்பகோணம் பகுதியை சுற்றியுள்ள பல்வேறு பள்ளிகளிள் இருந்தும் மாணவ மாணவியர்கள் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

சிலம்பம் என்பது தமிழர்களின் பிரத்யேக தற்காப்புக் கலை மற்றும் வீர விளையாட்டு ஆகும். பேச்சு வழக்கில் கம்பு சுற்றுதல் என்றும் அழைக்கப்படும் சிலம்பம் விளையாட்டில், சிலம்பத் தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் ஒருவர் தன்னை பாதுகாத்து கொள்ள முடியும்.சுமார் 5000 ஆண்டுகள் பழமையான வீர விளையாட்டாக அறியப்படும் தமிழர்களின் பாரம்பரிய பெருமைமிக்க சிலம்ப விளையாட்டை பாதுகாக்கவும், மாணவ மாணவியர்கள் அறிந்து கொள்ளச் செய்யும் நோக்கத்திலும், இந்த விளையாட்டினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த பள்ளி தாளாளர் திரு S. A கார்த்திகேயன் ஐயா அவர்களுக்கு மாணவ மாணவியர்களும், பெற்றோர்களும் நன்றியினை தெரிவித்தார்கள். போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சிறப்பாக விளையாடி வெற்றி பெற்ற முதல் பரிசு பெற்ற மாணவ மாணவியர்களுக்கு தங்கப் பதக்கமும் இரண்டாம் பரிசு பெற்ற மாணவ மாணவியர்களுக்கு வெள்ளிப் பதக்கமும் மூன்றாம் பரிசு பெற்ற மாணவ மாணவியர்களுக்கு வெண்கல பதக்கமும் வழங்கப்பட்டது. இப் போட்டியானது மாணவர்களுக்கு தனி பிரிவாகவும் மாணவிகளுக்கு தனி பிரிவாகவும் நடைபெற்றது.

மேலும் இப்போட்டியானது வயதின் அடிப்படையிலும், ஏழு வயதிற்குட்பட்ட மாணவ மாணவியர்களுக்கு ஒரு பிரிவாகவும், ஏழு வயது முதல் பத்து வயதிற்குட்பட்ட மாணவ மாணவியர்களுக்கு ஒரு பிரிவாகவும்,11 வயது முதல் 13 வயது உட்பட்ட மாணவ மாணவிகளுக்கு ஒரு பிரிவாகவும், 14 வயது முதல் 16 வயதிற்குட்பட்ட மாணவ மாணவிகளுக்கு ஒரு பிரிவாகவும் நடைபெற்றது.ஒற்றை கம்பு சுற்றுதல், இரட்டைக் கம்பு சுற்றுதல்,சிலம்பச் சண்டை என்று மூன்று விதமாகவும் நடைபெற்றது. இப் போட்டியில் சிறப்பாக விளையாடிய மாணவ மாணவியர்களை பாராட்டி பாராட்டு சான்றிதழையும், பதக்கங்களையும் பன்னாட்டு பள்ளி தாளாளர் பூர்ணிமா கார்த்திகேயன் அம்மா வழங்கினார்கள். இப்போட்டியில் மாணவ மாணவியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் 200க்கும் அதிகமான மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# திமுக கூட்டணியில் மனிதநேய மக்கள் கட்சி தொடரும் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா எம்எல்ஏ பேட்டி



**திருவாரூர்,ஆக.04-**

திருவாரூரில் பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா எம்-எல்ஏ செய்தியாளர்களை சந்தித்து பேசும்போது,ஆட்சியாளர்களை வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பது மாறி தற்போது ஆட்சியில் இருக்கக் கூடியவர்கள் வாக்காளர்களை தேர்ந்தெடுப்பதற்கான சூழலை தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் நடத்திக் கொள்ளும் வகையில் தேர்தல் ஆணையத்தின் பணி நடுநிலைமையை இழந்து செயல்படுவது ஜனநாயகத்திற்கு ஆபத்தாக அமைகிறது.பாஜக கூட்டணியில் இருந்து ஓபிஎஸ் விலகிருப்பது வரவேற்கக் கூடிய ஒன்று.பாஜகவுடன் கூட்டு சேர்ந்தது தவறு என்று ஓபிஎஸ் தற்போது உணர்ந்திருக்கிறார்.மோடிக்கும் ட்ரம்புக்கும் பெரிய வித்தியாசம் இல்லை.இரண்டு பேரும் நண்பர்கள் என்று கூறுவது பொருத்தமானது தான்.ஆனால் இந்திய பொருளாதாரத்தை நிலை குலைய வைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து வரும் ட்ரம்பின் நடவடிக்கையை எதிர்க்காமல் இருக்கும் இந்தியாவின் நடவடிக்கை கவலைக்குரிய ஒன்றாக உள்ளது.தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மிக சிறப்பான ஆட்சியாக செயல்பட்டு வருகிறது.சாதாரண சாமானிய மக்கள் பயன்படக்கூடிய வகையில் பல நல்ல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மக்களுடைய ஆதரவைப் பெற்ற அரசாக இந்த அரசு விளங்குகிறது.திமுக கூட்டணியில் மனிதநேய மக்கள் கட்சி தொடர்ந்து இயங்கும்.எடப்பாடி பழனிச்சாமியின் சுற்றுப்பயணம் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தாது.பாஜகவுடன் அதிமுக பயணிப்பதை அதிமுக தொண்டர்களே ஏற்றுக் கொள்ளவில்லை.எம்ஜிஆர் ஆட்சிக் காலத்தில் இருந்து அதிமுகவில் பயணம் செய்த அன்வர் ராஜா விலகி இருப்பதே அதிமுக கட்சியின் நிலவரத்தை காட்டுகிறது.எடப்பாடி பழனிச்சாமியின் பயணம் என்பது மாயத்தோற்றம். இந்த பயணத்திற்கு மக்கள் ஆதரவும் இல்லை அந்தக் கட்சியின் ஆதரவு மில்லை. ஆணவ படுகொலை வன்மையாக கண்டிக்கத்தக்கது.ஆணவ படுகொலையை தடுப்பதற்கு ஒரு சிறப்பு சட்டத்தை இயற்ற வேண்டும் என மனிதநேய மக்கள் கட்சி வலியுறுத்துகிறது.வெளிநாட்டுக்கு சுற்றுலா செல்வது தான் பிரதமர் பதவியின் முக்கியமான பணி என்று மோடி கருதுகிறார் என்றார்.இந்த சந்திப்பின் போது தலைமை நிர்வாககுழு உறுப்பினர் சபியுல்லா,மாநில செயலாளர் தைகால் முபாரக்,மாநில பிரதிநிதி வெண்கலம் ஜபருல்லா,மாவட்ட தலைவர் முஜிபுர் ரஹ்மான்,மாவட்ட செயலாளர் குத்புதீன்,துணை செயலாளர் நு£ருல்லா ஜக்கரியா,நகர தலைவர்கள் பாட்ஷா,நைனார் அகமது,தமுமுக மாவட்ட செயலாளர் நவாஸ் உள்ளிட்ட அனைத்து நகர,ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நாகப்பட்டினம் மாவட்டத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் பணிநியமன ஆணை

## கலெக்டர் ப.ஆகாஷ் வழங்கினார்



**நாகப்பட்டினம்,ஆக.04-**

நாகப்பட்டினம் மாவட்டம், சர் ஐசக் நியூட்டன் பொறியியல் கல்லூரியில் மாவட்;ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரகநகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலெக்டர் ப.ஆகாஷ், தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணிநியமன ஆணையினை வழங்கினார். உடன் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன்; உள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவுக்கிணங்க தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின் படி மாவட்ட நிர்வாகம் சார்பில் தகுதியான இளைஞர்களுக்கு தகுதி மற்றும் விருப்பங்களுக்கு ஏற்பதகுதியான வேலைவாய்ப்பு கிடைத்திட வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. இம்முகாமில் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சார்ந்த 18 வயதிலிருந்து 35 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் கலந்துகொண்டனர். 8ம் வகுப்பு தேர்ச்சி முதல் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு, கலை, அறிவியல், வணிகப் பட்டதாரிகள், ஐ.டி.ஐ., டிப்ளமோ, பொறியியல், நர்சிங் மற்றும் தையல் கலை பயிற்சி பெற்றவர்கள் கலந்துகொண்டனர்.

நடைபெற்ற வேலை தேடுபவர்களுக்கான மாவட்ட அளவிலான இவ் வேலை வாய்ப்பு முகாமில் 87 முன்னனி தனியார் துறை நிறுவனங்கள் பங்கு பெற்றனர். இம்முகாமில் 943 ஆண்கள் 1096 பெண்கள் மற்றும் 17 மாற்றுத்திறனாளிகள் உட்பட சுமார் 2056 வேலைநாடுநர்கள் கலந்துகொண்டனர். 296 நபர்கள் நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்டனர். 144 வேலைநாடுநர்கள் இரண்டாம் கட்ட தேர்வுக்கு தேர்ச்சி பெற்றனர். தேர்வு செய்யப்பட்ட 296 நபர்களுக்கு பணிநியமன ஆணையினை கலெக்டர், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத் தலைவர் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் என்.எம்.ஸ்ரீநிவாசன், உதவிதிட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) எஸ்.சித்ரா அரசு அலுவலர்கள் மற்றும் இளைஞர்கள் பலர்கலந்து கொண்டனர்.



விடுமுறை தினமான நேற்று குற்றாலத்தில் சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் குளித்து மகிழ்ந்தனர்.

# உப்பளத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்: மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் பிரச்சாரத்தில் எடப்பாடி பழனிச்சாமி பேச்சு



திருச்செந்தூர், ஆக.,04-

திருச்செந்தூர் வ.உ.சி திடலில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற தலைப்பிலஎ ழுச்சி உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

தமிழகத்தில் பேர் போன ஊர் திருச்செந்தூர். தற்போது இந்திய அளவில் பேர் போயி உள்ளது. திருச்செந்தூர் முருகனை வணங்கி பேசி வருகிறேன். திருச்செந்தூர் முருகனை வணங்கிட பல்வேறு நாடுகளில் இருந்து வந்து வணங்கிச் செல்கிறார்கள். இதேபோல் திருச்செந்தூர் அருகே உள்ள குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோவிலும் சிறப்பு பெற்றது. திருச்செந்தூர் சுற்று வட்டார பகுதி பனை தொழிலாளர்கள் நிறைந்த பூமி. மேலும் இங்கு விவசாயம், பனை தொழில், மீன் பிடி என மூன்று தொழிலும் பிரதானமாக உள்ளது.

கடந்த அதிமுக ஆட்சியில் பேரிடர் காலங்களில் வாழை விவசாயம் பாதிக்கப்பட்டால் முழு நிவாரணம் வழங்கப்பட்டது. திருச்செந்தூர் தொகுதியில் உப்பள தொழிலாளர்கள் உள்ளார்கள், அவர்கள் பயன் பெறும் விதமாக உப்பளத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும். மழை காலங்களில் உப்பளத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அதிமுக அரசு வழங்கும். ஆதிமக ஆட்சியமைத்ததும் ஏழை மக்களுக்கு கான்கிரிட் வீடு கட்டி கொடுக்கப்படும். வீட்டு மனை இல்லாதவர்களுக்கு இடம் கொடுத்து கான்கிரிட் வீடு கட்டி தரப்படும்.

அதிமுக ஆட்சி வந்தவுடன் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பரிசாக ரூ.2500 வழங்கப்படும், தீபாவளி தோறும் பெண்களுக்கு சேலை வழங்கப்படும். கடந்த ஆதிமுக அரசு தமிழகத்தில் இரண்டு முறை பயிர்கடன்களை தள்ளுபடி செய்தது. குடிமராமத்து கொண்டு வரபட்டு ஏரி, குளம், கண்மாய்களை தூர்வாரியது அதிமுக அரசு. அதில் கிடைத்த வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கினோம்.

மீண்டும் அதிமுக ஆட்சி வந்ததும் இந்த குடிமராமத்து தொடங்கும். தற்போது மின்வெடடு அதிகரித்துள்ளது., தூத்துக்குடியில் நான் இருந்த அறையில் கூட அடிக்கடி மின்சாரம் தடைபட்டது. தற்போது விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் குறிப்பிட்ட நேரம் மட்டுமே வழங்கப்படுகிறது. அதிமுக அரசு வந்ததும் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும். விவசாய பயிர்களுக்கு காப்பீட்டு திட்டம் வழங்கப்படும்.

திமுக ஆட்சியில் விலைவாசி உயர்வு அதிகரித்துள்ளது. அனைத்து பொருட்களும் இந்த திமுக ஆட்சியில் 50 சதவீத விலை உயர்ந்துள்ளது. ஆனால் வருமானம் உயரவில்லை. விலையை கட்டுப்பாட்டில் வைத்திருந்தது அதிமுக. கட்டுமானப் பொருட்கள் விலை உயர்ந்துள்ளது.

திமுக தேர்தல் வாக்குறுதி கொடுத்த 525 அறிவிப்புகளை முழுமையாக நிறைவேற்றவில்லை. அதிமுக கட்சியை பொறுத்தவரை ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஏழை மக்களுக்கு தொடர்ந்து குரல் கொடுக்கும்.

தற்போது சட்டம் ஒழுங்கு மிகவும் மோசமாக உள்ளது. திமுக மேடையில் எம்.பியும், எம்எல்ஏவும் ஒரே மேடையில் சண்டை போடுகிறார்கள். மாவட்ட ஆட்சியர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முன்னிலையில் சண்டை போடுகிறார்கள். கைதிகளும் காவல்களும் தாக்கும் காட்சிகள் தமிழகத்தில் நடைபெறுகிறது. கைதிகள் போலீசாரை மிரட்டுகிறார்கள். போலீசாருக்கு பாதுகாப்பு இல்லை. பெண்களுக்கு இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லை.

தங்கம் விலை ஏற்ற செய்தியை பார்த்த தமிழகத்தில் தினமும் கொலை நிலவரம் என்ன என்று பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது. கஞ்சா விற்பனை அமோகமாக விற்பனை ஆகிறது. போதை ஆசாமிகளை தட்டி கேட்க முடியவில்லை. கேட்டால் கொலை செய்யப்படுகிறார்கள். தமிழகத்தில் சிறுமி முதல் பாட்டி வரை பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது.

ஸ்காட்லாந்து போலீசாருக்கு இணையான தமிழக காவல்துறையினர் கைகள் கட்டப்பட்டுள்ளது.

அதிமுக ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களுக்கு இவர்கள் தற்போது ஸ்டிக்கர் ஒட்டி வருகிறார்கள். ஜெ., காலத்தில் இருந்த திட்டத்தை தற்போது பெயர் மாற்றி கொண்டு வருகிறார்கள். கடந்த தேர்தலின் போது ஸ்டாலின்; தமிழகம் முழுதும் சுற்றுபயணம் செய்து கிராமம் கிராமாக சென்று உங்கள் குறைகளை எழுதி பெட்டியில் போடுங்கள் நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் பெட்டியை திறந்து குறைகளை தீர்ப்போம் என்று கூறினாரே செய்தாரா.

உங்களுடன் ஸ்டாலின் என்று மக்களை ஏமாற்றும் ஸ்டாலின் இந்த 50 மாதங்கள யாருடன் இருந்தார். இந்த திட்டத்திற்காக அரசாங்கம் பணத்தில் சுமார் 600 கோடி செலவு செய்துள்ளார்.

இன்னும் 8 மாதத்தில் என்ன செய்யப்போகிறீர்கள். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் 46 பணிகளுக்கு தீர்வு காணப்படும் என்று பட்டியல் பேட்டுள்ளார். இந்த பிரச்சனைகளை எல்லாம் தீர்க்காமல் கடந்த 50 மாத காலம் என்ன செய்தார். மக்களை ஏமாற்றுவதில் தந்திரமாக செயல்படுபவர் மு.க.ஸ்டாலின். விலைவாசியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது அதிமுக. தற்போது திமுக ஆட்சியில் கடன் வாங்குவதில் முதல் மாநிலம் தமிழ்நாடு. திமுக ஆட்சியில் வாங்கும் கடன்கள் அனைத்தையும் மக்கள் தலையில் ஏற்றியுள்ளார்கள்.

அதிமுக ஆட்சியில் கொரோனா, கஜா புயல் காலங்களில் விலைவாசி உயரவில்லை. ஆனால் தற்போது கடன் விலைவாசி உயர்ந்துள்ளது. அதிமுக ஆட்சியில் உடன்குடி அனல்மின் நிலையம் கொண்டு வரப்பட்டது. தினத்தந்தி நாளிதழ் சிவந்தி ஆதித்தனார் விழாவிற்கு அரசு விழாவாக கொண்டாடியது அதிமுக. 52 கோடி மதிப்பில் ஆலந்தலையில் தூண்டில் வளைவு அமைத்து கொடுத்தோம். மீண்டும் மக்கள் அதிமுகவை ஆதரித்து வெற்றி பெறச்செய்யுங்கள் என பேசினார்.

கூட்டத்தில் சட்டமன்ற எதிர்கட்சி துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார், அதிமுக தெற்கு மவட்ட செயலாளர் சண்முகநாதன், வடக்கு மாவட்ட செயலாளர் கடம்பூர் ராஜூ, அமைப்பு செயலாளர் சின்னத்துரை, ஜெ., பேரவை மாவட்ட செயலாளர் விஜய குமார், ஜெ., பேரவை மாவட்ட தலைவர் கோட்டை மணிகண்டன், ஜெ., பேரவை மாவட்ட இணைச்செயலாளர்கள் சுரேஷ்பாபு, பழக்கடை திருப்பதி, ஜெ., பேரவை மாவட்ட துணைச்செயலாளர் ஆர்எம்கேஎஸ் சுந்தர், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் பூந்தோட்டம் மனோகரன், நகர செயலாளர் மகேந்திரன், எம்ஜிஆர் மன்ற மாவட்ட இணைச்செயலாளர் மகாலிங்கம், மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜேஸ்வரி, ஓட்டுநரணி ஒன்றிய அமைப்பு செயலாளர் வனசேகர், எம்ஜிஆர் மன்ற மாவட்ட துணைச்செயலாளர் கந்தன், நகர துணைச்செயலாளர் செல்வசண்முக சுந்தர், முத்துமணிகண்டன், ஜெ., பேரவை நகர செயலாளர் லெட்சுமணன், தகவல் தொழிற்நுட்பஅணி நகர செயலாளர் குருமுகேஷ், நகர வர்த்தகஅணி செயலாளர் முனீஷ்பிரபு, உடன்குடி ஒன்றிய முன்னாள் செயலாளர் முருங்கை மகாராஜா, உடன்குடி பஞ்., யூனியன் முன்னாள் துணைச் சேர்மன் சிவநேசன், உடன்குடி ஒன்றிய வழக்கறிஞர் பிரிவு சீர்காட்சி அஜித்குமார், பாஜக மாவட்ட செயலாளர் சித்ராங்கதன், மாவட்ட துணைத்தலைவர் நவமணிகண்டன், நகர தலைவர், செல்வக்குமரன், மண்டல் பொருளாளர் பலவேசக்கண்ணன் உள்ளிட்ட திரளானோர் கலந்து கொண்டனர்.

கண், ரத்த தானம் செய்வீர்

# மயிலாடுதுறை மாவட்டத்தில் தவெக சார்பில் பூத் முகவர் ஆலோசனை கூட்டம்



மயிலாடுதுறை,ஆக.04-

மயிலாடுதுறை மாவட்டத்தில் தனியானர் திருமண மண்டபத்தில் மயிலாடுதுறை சட்டமன்றதொகுதி. சீர்காழி ச. தொகுதி, பூம்புகார் ச, தொகுதிக்கு உட்பட்டபூத் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலர் குட்டிகோபி தலைமையில் நடைபெற்றது

இதில் முன்னிலையாக .ராஜ்குமார் மயிலை நகரம்,கமல்.சீர்காழி மேற்க்கு(ஒ) மனோகர் மயிலை வடக்கு ராஜா செம்பை கிழக்கு .ரமேஷ் மயிலாடுதுறை மத்திய வசந்த் செம்பை வடக்கு ரவி கொள்ளிடம் கிழக்கு ராஜ்குமார் குத்தாலம் வடக்கு பாலாஜி சீர்காழி நகரம் வகித்தனர் இதில் தேர்வு செய்யபட்டவர்கள்ஹரிஷ் குத்தாலம் மேற்கு சந்தோஷ் செம்பை தெற்கு விக்கி கொள்ளிடம் மேற்கு சரவணன் சீர்காழி கிழக்கு .சதீஷ் குத்தாலம் கிழக்குG.பாண்டி மயிலாடுதுறை தெற்கு சதீஷ் தரங்கம்பாடி பேரூர் விமல் வைத்தீஸ்வரன் கோவில் பேரூர் சூர்யா குத்தாலம் பேரூர் மணிகண்டன் மணல்மேடு பேரூர் மாவட்ட நிர்வாகி அறிவரசன் அமீன்,அபிராமி ராஜ், ரமேஷ்,நித்தியா, சுகுமார்,குமார், கார்த்தி,ரம்யாராணி ரம்யா,நகர இணை செயலாளர் பிரபஞ்சன், ஆசிப், பிரபு,தமிழரசன் ,ஆகாஷ், மகளிர் தனம் மற்றும் கழகத் தோழர்கள் தோழிகள் கலந்து கொண்டனர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தஞ்சாவூர் (இருப்பு), கும்பகோணம்**
**M.C. No. 46/2023**

இளவர்.மு.ஹப்ஷா
த/பெ.முகமதுபாஹிர்,
(மேற்படி இளவருக்காக அவரது தாயாரும், பாதுகாவலருமான ருபாயாபர்வீன்)
க.எண்: 48, முஸ்லிம் தெரு,
கிரசென்ட் ஸ்டார் பள்ளி,
சுவாமிமலை,
கும்பகோணம் தாலுக்கா. 612 302.
– மனுதாரர்

– எதிர் –

முகமதுபாஹிர்,
த/பெ. முகமது அமீன்,
க.எண்: 3/124 J.M.H. ரோடு,
நிடூர், மயிலாடுதுறை மாவட்டம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக மேற்படி நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் எதிர்மனுதாரருக்கு பல முறை அறிவிப்பு மேற்படி விலாசத்திற்கு சென்ற போதிலும் எதிர்மனுதாரர் அதனை பெறவில்லை. ஆகவே சமூகம் நீதிமன்றம் செய்திதாள் விளம்பரத்திற்கு உத்தரவிட்டுள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனுவில் எதிர்மனுதாரருக்கு ஆட்சேபனையிருப்பின் மேற்படி சமூகம் நீதிமன்றத்தில் வரும் 04.08.2025. அன்று காலை 10.30. மணிக்கு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

D.திருசக்திவேல்முருகன், பி.ஏ.,பி.எல்.,
B.அமீர்பாஷா, பி.ஏ.,பி.எல்.,
வழக்கறிஞர்கள்,
எண்:3, துக்காம்பாளையத் தெரு,
கும்பகோணம். 612 001.

# வடமாநிலங்களில் சிறையில் உள்ள தமிழக கன்னியாஸ்திரிகளை விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

## எடப்பாடி பழனிச்சாமியிடம் ஐக்கிய கிறிஸ்தவ பேரவை சார்பில் கோரிக்கை



கோவில்பட்டி ஆக 04

கோவில்பட்டி கிறிஸ்தவ ஐக்கிய பேரவை சார்பில் அதன் தலைவர் வழக்கறிஞர் ஆண்ட்ரூஸ்சாம்ராஜ், செயலாளர் முன்னாள் கல்வி அதிகாரி விஜயன், பொருளாளர் ஜான், உள்ளிட்ட நிர்வாகிகள் கோரிக்கை மனு கொடுத்தனர். அதில் கூறியுள்ளதாவது

தாங்கள் தமிழக முதல்வராக இருந்த காலகட்டத்தில் கோவில்பட்டி தொகுதியில் கடம்பூர் ராஜ் எம்எல்ஏ மூலம் பல்வேறு வளர்ச்சி பணிகளை நிறைவேற்றினீர்கள். அதற்காக முதலில் நன்றி கூறுகிறோம். தமிழகத்தில் வாழும் கிறிஸ்தவ பெருமக்களுக்கு தாங்கள் தொடர்ந்து நல் ஆதரவு தெரிவித்து வருகிறீர்கள் அதற்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

அதேபோல இந்தியாவில் வட மாநிலங்களில் கிறிஸ்தவர்கள் சிலரால் தாக்கப்படுவதும் பல்வேறு இன்னல்களை சந்திப்பதும் தொடர்கிறது. குறிப்பாக கத்தோலிக்க திருச்சபை கன்னியாஸ்திரியர்கள் மீது தேவையில்லாத வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். கிறிஸ்தவ மக்கள் மீது தொடுக்கப்படுகின்ற பல்வேறு தாக்குதல்களை தடுத்து நிறுத்திடவும், கிறிஸ்தவ நிறுவனங்களை குறிவைத்து தாக்கல் கூடிய நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவில் பாதுகாப்பை உறுதி செய்திட தாங்கள் கடும் முயற்சி எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம். கிறிஸ்தவ கல்வி நிறுவனங்கள் மீது தொடுக்கப்படுகின்ற பொய்யான வழக்குகள் கிறிஸ்தவ மக்கள் மீது ஏவப்படுகிற வழக்குகள் இவற்றிற்கு எதிராக தாங்கள் குரல் கொடுக்க வேண்டும். மொத்தத்தில் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு அரணாக நீங்கள் இருக்க வேண்டும் என கோரிக்கை விடுகிறோம். இவ்வாறு கூறியுள்ளனர். ஐக்கிய கிறிஸ்தவ பேரவை நிர்வாகிகள் மோசஸ், யோசுவா, டேவிட், ஆசியா ஃபார்ம் பாபு உட்பட ஏராளமான நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# கோவில்பட்டி நாடார் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் மன்ற தொடக்க விழா

**கோவில்பட்டி ஆக 04**

கோவில்பட்டி நாடார் மேல்நிலைப்பள்ளியில் 55 ஆவது அறிவியல் மன்ற தொ டக்க விழா நடந்தது. கோவில்பட்டி நாடார் உறவின் உரை சங்கத் தலைவர் ஆர். எஸ். ரமேஷ் தலைமை வைத்தார். சங்கச் செயலாளர் ஜெயபாலன் பத்திர காளி அம்மன் கோவில் தர்ம கர்த்தா மாரியப்பன் ஆகியோர் முன்னிலை வைத்தனர். முன்னதாக காலை 9 மணிக்கு நாடார்மேல்நிலைப்பள்ளி செயலாளர் வழக்கறிஞர் ஜெ. ரத்தினராஜா தலைமையில் அறிவியல் கண்காட்சியை இஸ்ரோ விஞ்ஞானி முனைவர் சசிகுமார் தொடங்கி வைத்து 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளின் உடைய கணித படைப்புகளைபார்வையிட்டு மாணவ மாணவிகளை உற்சாகப்படுத்தி பாராட்டும் பரிசுகளும் வழங்கினார். தொடர்ந்து மாலை 3 மணிக்கு நடந்த விழாவில் மாணவி காமினி தெய்வானை வரவேற்புரை ஆற்றினார். மாணவி கற்பூர ஜோதி ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். மாணவி அனன்யா ஸ்ரீ இன்றைய உலகில் அறிவியல் என்ற தலைப்பில் உரையாற்றினார்.கோவில்பட்டி நாடார் காமராஜர் மெட்ரிகுலேஷன் பள்ளி முதல்வர் பிரபு இஸ்ரோ விஞ்ஞானி முனைவர் சசிகுமாரை பற்றிய அறிமுக உரையாற்றினார். நிலவு என்னும் கனவு எனும் தலைப்பில் முனைவர் சசிகுமார் சிறப்புரை ஆற்றினார்.

**சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை.**
**மனு எண்.ஒ.மு.அ 2/4187/2025**

K.சதீஷ்,
த/பெ.காளிமுத்து,
செக்கனம்,
திருக்காம்புலியூர் கிராமம்,
கிருஷ்ணராயபுரம் வட்டம்,
கரூர் மாவட்டம்.
– மனுதாரர்

– எதிர் –

வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதார் சதீஷ் என்பவர் தனது தாயார் "பட்டு" என்பவர் மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் 13.04.1995 அன்று இறந்தார் என்று கூறி இறப்பு சான்றிதழ் வேண்டி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் குளித்தலை சார் ஆட்சியர் அலுவலகத்தில் 7 தினங்களுக்குள் தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

K.சதீஷ்,
மனுதாரர், திருக்காம்புலியூர்.

**வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் சீர்காழி.**

ஆதித்தன்,
த/பெ.சுப்புராயன்,
அண்ணாநகர்,
31.முதலைமேடு,
சீர்காழி வட்டம்,
மயிலாடுதுறை.
– மனுதாரர்

வருவாய் கோட்டாசியர், சீர்காழி.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை "சுப்புராயன்" த/பெ.அருணாசலம் என்பவருக்கு இறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் கடந்த 03.08.2022 ஆண்டு மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

சு.ஆதித்தன், மனுதாரர்,
31.முதலைமேடு,
சீர்காழி வட்டம்.

**தேசிய நலவாழ்வு குழுமம்**
**மாவட்ட நலவாழ்வு சங்கம், பெரம்பலூர் மாவட்டம்.**

பெரம்பலூர் மாவட்டத்தில் காலியாக உள்ள ஒப்பந்த கீழ்குறிப்பிட்ட பணியிடங்களை பெரம்பலூர் மாவட்ட நலவாழ்வு சங்கம் மூலம் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 14.08.2025 அன்று மாலை 05.00 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | பதவியின் பெயர் | எண்ணிக்கை | கல்வித் தகுதி | ஊதியம் / மாதம் |
|---|---|---|---|---|
| 1. | மருத்தாளுநர் | 1 | 1. A Diploma in Pharmachy or Bachelor of Pharmacy or Pharm.D<br>2. Must have registered with TN Pharmachy Council and must keep the registration alive by renewing it regularly every year. | ரூ.15000/– |
| 2. | ஆய்வக நுட்புநர் | 1 | 1. Must have pass +2 Examinations.<br>2. Must Possess certificate in Medical Lab Techonoly Course (one year duration) undergone in any institution recognised by Directorate of Medical Education and<br>3.Must have good physique, good vision and capacity to do outdoor work. | ரூ.13000/– |
| 3 | செவிலியர் (RCH & NCD) | 3 | 1. DGNM / BSc Nursing from a Government / Government recognized institution and<br>2. Permanently registered with the Tamil Nadu Nurses and Midwives Council on or before the date of this notification. | ரூ.18000/– |
| 4 | சுகாதார ஆய்வாளர் நிலை – 2 | 1 | 1. 12th with Biology / Botany and Zoology<br>2. Must have passed Tamil language as a subject in SSLC level<br>3. Must possess two years for Multi-Purpose Health Worker (Male) / Health Inspector/ Sanitary Inspector Course certificate granted by the Director of Public Health and Medicine | ரூ.14000/– |
| 5 | பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் | 2 | 1. 8 ஆம் வகுப்பு தேர்ச்சி<br>2. தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். | ரூ.8500/– |

நிபந்தனைகள் :

* இந்த பதவி முற்றிலும் தற்காலிகமானது ( 11 மாதங்கள் ஒப்பந்த அடிப்படையில்)
* எந்த ஒரு காலத்திலும் பணி நிரந்தரம் செய்யப்படமாட்டாது.
* பணியில் சேர்வதற்கான மேற்கண்ட நிபந்தனைக்கு கட்டுபட்டு ஒப்புதல் கடிதம் அளிக்க வேண்டும்.
* மேலும் மருத்துவ தேர்வாணையம் மூலம் பணி நிரப்பப்படும்போது பணி ஆணை இரத்து செய்யப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :
செயற் செயலர் / மாவட்ட சுகாதார அலுவலர்,
மாவட்ட நலவாழ்வு சங்கம், மாவட்ட சுகாதார அலுவலகம்,
பழைய அரசு கண் மருத்துவமனை வளாகம், துறைமங்கலம், பெரம்பலூர்.

குறிப்பு :
விண்ணப்ப படிவங்கள் https://perambalur.nic.in/ என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மற்றும் பெரம்பலூர் மாவட்ட சுகாதார அலுவலகத்திலும் பெற்றுகொள்ளலாம்.
விண்ணப்பங்கள் நேரிலோ அல்லது விரைவு தபால் மூலமாகவோ வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பத்துடன் பணியிடங்களுக்கான உரிய சான்றிதழ் நகல்களை சுய சான்றொப்பமிட்டு (Self attested) சமர்ப்பிக்க வேண்டும்.
14.08.2025 மாலை 05.00 மணிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏதும் ஏற்றுகொள்ளப்படாது.

செயற் செயலர் / மாவட்ட சுகாதார அலுவலர்,
மாவட்ட நலவாழ்வு சங்கம், மாவட்ட சுகாதார அலுவலகம், பெரம்பலூர்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.33/செ.ம.தொ.அ/2025/பெரம்பலூர்/ நாள். 03.08.2025

# உடல் தகுதிக்கு இன்னும் டிக் மார்க் கிடைக்கவில்லை

## சென்னை நிகழ்ச்சியில் தோனி ருசிகரம்

**சென்னை, ஆக. 04-**

அடுத்த 5 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடும் அளவுக்கு எனது உடல் தகுதிக்கு இன்னும் டிக் மார்க் கிடைக்கவில்லை. என்று தோனி கிண்டலாக தெரிவித்தார்.



**ரசிகர்கள் சோகம்...**

நடப்பாண்டு ஐ.பி.எல். தொடரில் இருந்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெளியேறியது எம்.எஸ்.தோனி ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியது. மேலும், அடுத்தாண்டும் ஐ.பி.எல். தொடரில் தோனி விளையாடுவாரா என்று ரசிகர்கள் மனதில் கேள்வி எழுந்துள்ளது. இந்நிலையில், அடுத்த ஆண்டு சி.எஸ்.கே. அணியின் கேப்டனாக ருதுராஜ் கெய்க்வாட் தொடர்வார் என்று தோனி தெரிவித்துள்ளார்.

**கெய்க்வாட்...**

சென்னையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய தோனி, "அடுத்த ஆண்டு ருதுராஜ் கெய்க்வாட் வந்துவிடுவார், அவர் வந்ததும் அனைத்தும் சரியாகிவிடும். ஐ.பி.எல். 2025-ல் நாங்கள் சரியாக விளையாடவில்லை என்று சொல்லவில்லை. இருப்பினும் சில இடங்களில் கூடுதல் கவனம் செலுத்தி இருக்க வேண்டும். மினி ஆக்சன் டிசம்பர் மாதம் நடைபெற உள்ளது. அதில் அணியில் சில வீரர்களை எடுக்க உள்ளோம்.

**டிக் மார்க்...**

அடுத்த 5 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடும் அளவுக்கு, என்னுடைய கண்கள் நன்றாக உள்ளது என மருத்துவர்கள் கூறிவிட்டனர். சூட்சமம் என்னவென்றால், உடல் தகுதிக்கு இன்னும் டிக் மார்க் கிடைக்கவில்லை. கண்களை வைத்து மட்டுமே விளையாட முடியாதே" என்று கிண்டலாக தெரிவித்தார்.

# இங்கிலாந்து தொடரில் பல்வேறு சாதனைகள் புரிந்த இந்திய அணி

**லண்டன், ஆக. 04-**

இங்கிலாந்து தொடரில் இந்திய அணி பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளது.



**த்ரில் பினிஷ்...**

இந்தியா - இங்கிலாந்து இடையே 5-வது டெஸ்ட் போட்டி இருதயத்துடிப்பைப் பாதிக்கும் த்ரில் பினிஷ் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தொடரை இந்திய அணி சமன் செய்ய வாய்ப்பு, அதே வேளையில் முதல் டெஸ்ட் போல் இலக்கை இங்கிலாந்து விரட்டி விடவும் வாய்ப்பு உள்ளது.

**சமன் செய்யலாம்...**

ஆனால், முதல் டெஸ்ட் பிட்ச் போல் இந்தப் பிட்ச் இல்லை. இந்தப் பிட்சும் கொஞ்சம் அதன் சாரத்தை இழந்திருந்தாலும் இன்னும் கொஞ்சமாகவேனும் சத்து உள்ளது. பிரஷர் போட்டால் இங்கிலாந்தை சுருட்டி தொடரைச் சமன் செய்யலாம்.

**இந்திய அணி சாதனை...**

ஆனால், இந்தத் தொடரில் பல சாதனைகளை இந்திய அணி செய்துள்ளது. அவை வருமாறு: ஆண்டர்சன் - டெண்டுல்கர் டிராபியான இந்தத் தொடரில் இந்திய அணி மொத்தமாக 3,809 ரன்களைக் குவித்துள்ளது. 1989-ல் ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியா இங்கிலாந்துக்கு எதிராக 3,877 ரன்களைக் குவித்த பிறகு இது தான் அதிகம். இந்தத் தொடரில் 8 முறை 300+ ஸ்கோர்களை இந்திய அணி எட்டியுள்ளது. எந்த ஒரு டெஸ்ட் தொடருக்கும் இது அதிக 300+ ரன்களாகும். அதே போல் 350 ரன்களை 8 முறை எடுத்துள்ளது. இதுவும் ஒரு சாதனையே.

**ஜடேஜா சாதனை...**

அதே போல் ஜடேஜா 6 முறை 50-க்கும் அதிகமான ரன்களை இந்தத் தொடரில் எடுத்து இதே சாதனையைப் புரிந்த நெடும் பட்டியலில் இணைந்தார். அதுவும் 4 அரைசதங்கள் 2-வது இன்னிங்ஸில் வந்தது என்பதும் ஜடேஜாவை ஒரு நீள்நெடும் சாதனைப் பட்டியலில் இணைத்துள்ளது.

**கில் முறியடிப்பு...**

ஷுப்மன் கில் இந்தத் தொடரில் கேப்டனாக பேட்டிங்கில் எடுத்த 754 ரன்கள் டான் பிராட்மேன் கேப்டனாக இங்கிலாந்துக்கு எதிராக 1936-37-ல் எடுத்த 810 ரன்களுக்கு அடுத்த இடத்தில் உள்ள சாதனையாகும். கிரஹாம் கூச் இந்தியாவுக்கு எதிராக 1990 தொடரில் 752 ரன்கள் எடுத்த சாதனையையும் கில் முறியடித்து விட்டார்.

**12 சதங்கள்...**

இந்திய அணி இந்தத் தொடரில் 12 சதங்களைப் பதிவு செய்துள்ளது. அதே போல் 5 இந்திய வீரர்கள் இந்தத் தொடரில் 400-க்கும் அதிகமான ரன்களை எடுத்துள்ளனர். ஜெய்ஸ்வால் நேற்றைய சதத்தின் மூலம் இந்தப் பட்டியலில் இணைந்தார். 1993 ஆஷஸ் தொடரில் 6 ஆஸ்திரேலிய பேட்டர்கள் 400+ ஸ்கோர்களை எடுத்தனர். 1964-65ல் தென் ஆப்பிரிக்கா வீரர்கள் 5 பேர் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் 400+ ரன்களை எடுத்துள்ளனர். 3 இந்திய பேட்டர்கள் அதாவது, கில், ராகுல் ஜடேஜா 500 ரன்களைக் கடந்துள்ளனர். இதுவும் ஒரு சாதனைத் துளிதான். சையத் கிர்மானி (101), அமித் மிஸ்ரா (84) ஆகியோருக்குப் பிறகு ஆகாஷ் தீப் நைட் வாட்ச்மேனாக இறங்கி 66 ரன்களை எடுத்துள்ளார்.

## லெஜண்ட்ஸ் கிரிக்கெட்: பாக்.கை வீழ்த்தி

# தென் ஆப்பிரிக்கா சாம்பியன்




**பர்மிங்காம், ஆக. 04-**

வேர்ல்ட் சாம்பியன்ஷிப் ஆப் லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது தென் ஆப்பிரிக்க அணி.

**முன்னாள் வீரர்கள்...**

இங்கிலாந்தில் கடந்த மாதம் தொடங்கிய இந்த தொடர் நேற்று முன்தினம் (ஆக.2) நிறைவடைந்தது. இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள் உள்ளிட்ட அணிகள் இதில் பங்கேற்றன. சர்வதேச கிரிக்கெட்டில் அசத்திய முன்னாள் வீரர்கள் இதில் பங்கேற்று விளையாடினர்.

**பாகிஸ்தான் பேட்டிங்...**

இங்கிலாந்தில் உள்ள பர்மிங்காம் நகரில் நேற்று முன்தினம் இந்த தொடரின் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் மற்றும் தென் ஆப்பிரிக்கா அணிகள் விளையாடின. டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பேட் செய்து 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 195 ரன்கள் எடுத்தது. ஷர்ஜீல் கான் 44 பந்துகளில் 76 ரன்கள் எடுத்தார். உமர் அமீன் 36, ஆசிப் அலி 28, ஷோயப் மாலிக் 20 ரன்கள் எடுத்தனர்.

**வலுவான பார்ட்னர்ஷிப்...**

20 ஓவர்களில் 196 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை தென் ஆப்பிரிக்கா விரட்டியது. ஹசிம் ஆம்லா மற்றும் ஏபி டிவில்லியர்ஸ் இணைந்து இன்னிங்ஸை ஓபன் செய்தனர். ஆம்லா 18 ரன்களில் ஆட்டமிழந்தார். முதல் விக்கெட்டுக்கு 72 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தது தென் ஆப்பிரிக்கா. பின்னர் ஜே.பி.டுமினி உடன் இணைந்து 125 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தார் ஏபி டிவில்லியர்ஸ்.

**தென் ஆப்பிரிக்கா வெற்றி...**

16.5 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 197 ரன்கள் எடுத்து தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்றது. டிவில்லியர்ஸ் 60 பந்துகளில் 120 ரன்கள், டுமினி 28 பந்துகளில் 50 ரன்கள் எடுத்தனர். ஆட்ட நாயகன் விருதை டிவில்லியர்ஸ் வென்றார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## வெஸ்ட் இண்டீஸ் திரில் வெற்றி

வெஸ்ட் இண்டீஸ்-பாகிஸ்தான் அணிகள் மோதிய 2-வது 20 ஓவர் போட்டி நேற்று நடைபெற்றது. முதலில் ஆடிய பாகிஸ்தான் 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 133 ரன் எடுத்தது. ஹசன் நவாஸ் 23 பந்தில் 40 ரன்னும் (1 பவுண்டரி, 4 சிக்சர்), கேப்டன் சல்மான் ஆஹர் 33 பந்தில் 38 ரன்னும் (3 பவுண்டரி, 1 சிக்சர்) எடுத்தனர். ஜேசன் ஹோல்டர் 19 ரன் கொடுத்து 4 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் 134 ரன் இலக்கை கடைசி பந்தில் எடுத்தது. அந்த அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 135 ரன் எடுத்து 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் 3 போட்டிக் கொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் 14 ரன்னில் வெற்றி பெற்று இருந்தது. 3-வது மற்றும் கடைசி 20 ஓவர் போட்டி இன்று நடக்கிறது.

## புதிய கேப்டன் இஷான் கிஷன்

இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் கிரிக்கெட் தொடர்களில் ஒன்றான துலீப் கோப்பை கிரிக்கெட் தொடரின் நடப்பு சீசன் வரும் 28-ம் தேதி முதல் பெங்களூருவில் தொடங்கவுள்ளது. இதில் மேற்கு மண்டலம் மற்றும் தெற்கு மண்டல அணிகள் நேரடியாக அரையிறுதிக்கு தகுதிப்பெற்றுள்ளன. வடக்கு மண்டலம், கிழக்கு மண்டலம், வடகிழக்கு மண்டலம் மற்றும் மத்திய மண்டல அணிகள் பிளே ஆப் (காலிறுதி) போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதையடுத்து இப்போட்டியில் பங்கேற்கும் அணிகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒருபகுதியாக கிழக்கு மண்டல அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு இஷான் கிஷன் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். அபிமன்யூ ஈஸ்வரன் துணை கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். மேற்கொண்டு, நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி, ரியான் பராக் மற்றும் ஆகாஷ் தீப் உள்ளிட்ட வீரர்களும் இந்த அணியில் இடம்பிடித்துள்ளனர்.

## வாக்குறுதி கொடுத்த கில்

இங்கிலாந்தில் நடைபறும் டெஸ்ட் தொடரில் அற்புதமான பேட்டிங்கை வெளிப்படுத்திய இந்திய கேப்டன் சுப்மன் கில் மொத்தம் 754 ரன்கள் அடித்துள்ளார். இதன் மூலம் ஒரு டெஸ்ட் தொடரில் அதிக ரன் குவித்த இந்திய கேப்டன் என்ற மாபெரும் சாதனையை சுனில் கவாஸ்கரிடம் இருந்து தட்டிப்பறித்தார். இந்நிலையில் சுப்மன் கில்லுக்கு போட்டியின் முடிவில் சுனில் கவாஸ்கர் 2 சிறப்பு பரிசுகளை வழங்கினார். தனது கையொப்பமிட்ட ஒரு சிறிய சிவப்பு தொப்பி மற்றும் சட்டை ஒன்றை பரிசாக வழங்கினார். இது குறித்து கவாஸ்கர் கூறியது பின்வருமாறு:-

"சிறப்பு. என்னுடைய இன்னொரு சாதனையையும் முறியடிப்பீர்கள் என்று நான் எதிர்பார்த்தேன். இது என்னிடமிருந்து உங்களுக்கு சிறிய பரிசு. ஒரு சட்டை மற்றும் என்னுடைய கையொப்பமிட்ட தொப்பி. இந்த தொப்பியை சிலருக்கு மட்டுமே நான் கொடுப்பேன். வாழ்த்துகள், கடவுள் உங்களை ஆசீர்வதிக்கட்டும். 2021 ஆஸ்திரேலியா காபா டெஸ்ட் போட்டியில் இந்தியா வென்ற நாளன்று அணிந்திருந்த அதிர்ஷ்டமான சட்டையை நான் மீண்டும் இப்போட்டியில் வெல்வோம் என்ற நம்பிக்கையுடன் அணிந்து வருவேன்" என்று கூறினார். அதை நன்றி சொல்லி வாங்கிக் கொண்ட கில், 'நாளை நாம் வெற்றி பெறுவோம்' என்று வாக்குறுதி கொடுத்தார்.

## இங்கிலாந்தில் ரோகித் சர்மா

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முடிவடைந்துள்ள 4 போட்டிகளின் முடிவில் தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5-வது மற்றும் கடைசி போட்டி லண்டன் ஓவலில் நடைபெற்று வருகிறது.

இதனிடையே 3-வதுநாள் ஆட்டத்தை நேரில் காண இந்திய டெஸ்ட் முன்னாள் கேப்டனும் தற்போதைய ஒருநாள் அணியின் கேப்டனுமான ரோகித் சர்மா ஓவல் மைதானத்திற்கு சென்றார். அங்கிருந்து இந்திய அணியினரை உற்சாகப்படுத்தினார். இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

## தோனிக்கு உற்சாக வரவேற்பு

கிரிக்கெட் வீரர் எம்.எஸ். தோனி கோவையில் தனியார் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக விமானம் மூலம் ஞாயிறுக்கிழமை கோவை வந்தடைந்தார். அப்போது கோவை விமான நிலையத்தில் இருந்த மக்கள் பலரும் தோனியை பார்த்தவுடன் மாஹி, தல தோனி, என்று உற்சாக முழக்கத்துடன் வரவேற்றனர்.

தொடர்ந்து அவரிடம் புகைப்படம் எடுத்துக் கொள்வதற்கு மக்கள் முந்தி அடித்துச் சென்றனர். ஆனால் காவல்துறையினர் தோனிக்கு பாதுகாப்பு வழங்கியதை அடுத்து காரில் புறப்பட்டுச் சென்றார்.

## 100 விக்கெட்கள் வீழ்த்திய சிராஜ்

ஆண்டர்சன் - டெண்டுல்கர் டிராபியில் 2-1 என இங்கிலாந்து முன்னிலை வகிக்க கடைசி டெஸ்ட் போட்டி ஓவல் திடலில் நடைபெற்று வருகிறது. மூன்றாம் நாள் முடிவில் இங்கிலாந்து அணி 50 ரன்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்தது. மூன்றாம் நாளின் கடைசி ஓவரின் 5ஆவது பந்தில் ஜாக் கிராலி ஆட்டமிழந்தார். அத்துடன் ஆட்டம் முடிக்கப்பட்டது. இங்கிலாந்து வெற்றிபெற இன்னும் 324 ரன்கள் தேவை. இந்தியா வெற்றிபெற 8 விக்கெட்டுகள் தேவையாக இருக்கிறது.

இந்தப் போட்டியில் சிராஜ் முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் எடுக்க, இரண்டாவது இன்னிங்ஸில் யாருமே நினைக்காத போது கம்பேக் கொடுத்துள்ளார். வெளிநாட்டில் 100 விக்கெட்டுகள் எடுத்த சிராஜுக்கு பலரும் வாழ்த்துகளைக் கூறி வருகிறார்கள். சோனி ஸ்போர்ட்ஸ் டி.எஸ்.பி. சிராஜ் எனக் குறிப்பிட்டு அவரது ரொனால்டோ பாணியிலான கொண்டாட்டத்தை பதிவிட்டுள்ளது.

## ஆசிய கோப்பை டி-20 தொடர்:

# துபாயில் இந்தியா - பாக்., மோதல்

**துபாய், ஆக. 04-**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் துபாய் மைதானத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் செப்டம்பர் 14ம் தேதி மோதுகின்றன

**ஆசிய கோப்பை டி20...**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் செப்டம்பர் 9 தொடங்கி செப்டம்பர் 19 வரை நடைபெறும் என ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவர் மோசின் நக்வி அறிவித்துள்ளார்.

**ஒரே பிரிவில் இந்தியா-பாக்...**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் குரூப் ஏ-வில் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்தியா - பாகிஸ்தான் போட்டி செப்டம்பர் 14ல் நடைபெறுகிறது. குரூப் பி-ல் வங்கதேசம், இலங்கை, ஆப்கானிஸ்தான், ஹாங்காங் அணிகள் இடம்பெற்றுள்ளன

**துபாய் மைதானத்தில்...**

இந்நிலையில், ஆசிய கோப்பை டி20 போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. செப்டம்பர் 14ம் தேதி துபாய் மைதானத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

## தன்மான உணர்வை விதைத்தவர்:

# தீரன் சின்னமலைக்கு முதல்வர் புகழஞ்சலி

**சென்னை, ஆக. 04-**

விடுதலை போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு நாளில், அவரது திருவுருவச் சிலைக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'கொங்கு மக்கள் தந்த வரிப்பணம் மைசூர் நாட்டிற்கு ஏன் செல்ல வேண்டுமெனத் தடுத்துப் பணத்தைப் பறித்து ஏழை எளியோர்க்கு வழங்கிய வீரன் தீரன் சின்னமலை. அவனை அழிக்க முயன்ற ஆங்கிலேயரை 1801-இல் காவிரிக் கரையிலும், 1802-இல் ஓடா நிலையிலும், 1804-இல் அரச்சலூரிலும் ஆக மூன்று இடங்களில் எதிர்த்து வென்றார் வீரன் தீரன் சின்னமலை.

போரிட்டு வெல்ல முடியாத அந்த மாவீரனைச் சூழ்ச்சியால் கைது செய்த ஆங்கிலேயர் ஆடிப்பெருக்கு நாளில் சங்ககிரி கோட்டையில் தூக்கிலிட்டனர். அந்த மாவீரன் தீரன் சின்னமலை நினைவு நாள் ஆடிப் பதினெட்டாம் நாள். அந்த மாவீரன் தியாகம் போற்றி கருணாநிதி 4.10.1998 அன்று சென்னை கிண்டியில் திறந்து வைத்த தீரன் சின்னமலையின் கம்பீரச் சிலைக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார்கள்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ' எத்தனை நாள் வாழ்ந்தோம் என்பதைவிட எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியம் என ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய ஓடாநிலைக் கோட்டையின் ஒப்பற்ற விடுதலைப் போராளி தீரன் சின்னமலையின் நினைவு நாள்.

சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையே தோன்றி, நம் உரிமைகளில் எவர் கை வைத்தாலும் வெகுண்டெழுவோம் என்ற தன்மான உணர்வை இம்மண்ணில் விதைத்துச் சென்ற வீரப்பெருஞ்சுடரான தீரன் சின்னமலை அவர்களின் புகழ் ஓங்குக' எனத் தெரிவித்துள்ளார்

# உடலுறுப்பு தானத்தில் தமிழகம் முதலிடம்: அமைச்சர் மா.சுப்பிரமணியம் பெருமிதம்

**சென்னை, ஆக. 04-**

உடல் உறுப்பு தானம் வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் இடம் பிடித்துள்ளது என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை, சாந்தோம் செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாம் நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டார்.

அந்நிகழ்வில் பேசிய அவர், உடல் உறுப்பு தானம் வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் இடம் பிடித்துள்ளது. மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி.நட்டா நமது மாநில அரசின் தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலாளர் டாக்டர் கோபாலகிருஷ்ணனிடம் 2024-ம் ஆண்டிற்கான தேசிய விருது வழங்கி இருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்புதானம் வழங்குவதில் இந்தியாவிற்கே தமிழ்நாடு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது என்றால் 2008-ம் ஆண்டு கருணாநிதி கொண்டு வந்த உறுப்பு மாற்று சிகிச்சைகள் ஆகும். முதல்வர் மு.க.ஸ்டாலின் 2023 செப்டம்பர் 23-ந் தேதி ஒரு சிறப்பான அறிவிப்பை வெளியிட்டார். அந்த அறிவிப்பு என்பது மூளைச்சாவு அடைந்து உறுப்பு தானம் வழங்குபவரின் உடலுக்கு அரசு மரியாதை வழங்கப்படும் என்பதாகும். இந்த அறிவிப்பிற்கு பிறகு 479 பேர் உடல் உறுப்பு தானம் செய்து அவர்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு (2024) மட்டும் 268 பேர் உடலுறுப்பு தானம் செய்து இந்தியாவில் மட்டுமல்ல உலகளவில் தமிழ்நாடு ஆயிரக்கணக்கான உயிர்களை காப்பதில் முதன்மையான மாநிலமாக இருக்கிறது. அந்தவகையில் இந்த திட்டத்தில் தமிழ்நாடு முதல் மாநிலமாக மத்திய அரசு அறிவித்து டெல்லியில் தேசிய விருது வழங்கப்பட்டிருக்கிறது என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

# எனது ரசிகர்களின் அன்பை தவறாக பயன்படுத்த மாட்டேன்: நடிகர் அஜித்

**சென்னை, ஆக. 04-**

ரசிகர்களின் அன்பை சுயலாபத்துக்காக பயன்படுத்த மாட்டேன் என்று நடிகர் அஜித்குமார் தெரிவித்துள்ளார்.



நடிகர் அஜித்குமார் நேற்றுடன் திரையுலகில் 33 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். இதை நினைவு கூர்ந்து, அஜித்குமார் தரப்பிலிருந்து நேற்று (ஆக. 3) வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் தெரிவித்திருப்பதாவது: சினிமாவில் 33 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதைக் கொண்டாடுவதற்காக இந்தப் பதிவு எழுதப்படவில்லை.

எனக்கு எண்களின் மீது நம்பிக்கையில்லை. சினிமாவில் ஒவ்வொரு வருடமும் எனக்கு முக்கியமானதே. இந்தப் பயணத்திற்காக முழுமனதுடன் கைக்கூப்பி நன்றி தெரிவிக்கிறேன்! நான் இன்று என்னவாக இருக்கிறேனோ அதற்கு முக்கிய காரணம் என் ரசிகர்களின் அன்பும் ஆதரவும்தான். நன்றி. ரசிகர்களின் அன்பை தவறாகவோ சுயலாபத்துக்காகவோ பயன்படுத்த மாட்டேன்' என்று குறிப்பிட்டுள்ள அஜித்குமார், தமது பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'அஜித்குமார் மோட்டார் ரேசிங்' குறித்தும் உருக்கத்துடன் பதிவிட்டுள்ளார்.

## துப்பாக்கி முனையில்

# சென்னையில் பிரபல ரவுடி கைது

**சென்னை, ஆக. 04-**

5 கொலை உட்பட 22 குற்ற வழக்குகளில் சிக்கிய பிரபல ரவுடி காதுகுத்து ரவி, துப்பாக்கி முனையில் கைது செய்யப்பட்டார்.

சென்னையை கலக்கி வந்தவர் பிரபல ரவுடி ரவி என்ற காதுகுத்து ரவி (56). 1991-ம் ஆண்டு முதல் 5 கொலை, 5 கொலை முயற்சி உட்பட 22-க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் இவர் மீது உள்ளது. போலீஸார் இவரை தொடர்ந்து தேடி வந்தனர். இந்நிலையில், நீலாங்கரை போலீஸார் வழக்கம் போல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அதே பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஒருவர் தங்கி உள்ளதாக போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, நீலாங்கரை போலீஸார் சம்பந்தப்பட்ட அந்த அடுக்குமாடி குடியிருப்புக்கு விரைந்த போது, அங்கிருந்து அந்த நபர் தப்பி ஓட முயன்றார்.

இதையடுத்து, அவரை போலீஸார் துப்பாக்கி முனையில் மடக்கி பிடித்து காவல் நிலையம் அழைத்து சென்று விசாரித்தனர். இதில், பிடிபட்டது பிரபல ரவுடியான காதுகுத்து ரவி என்பது தெரிந்தது. முன்னதாக, அவரது அறையை சோதனை செய்த போது, அங்கு மெத்தம் பெட்டமைன் வகை போதைப் பொருள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. இதையடுத்து, போதைப் பொருள் வழக்கில் அவரை போலீஸார் கைது செய்தனர். பின்னர், அவரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

## விடுமுறை தினம் எதிரொலி:

# குமரியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

**கன்னியாகுமரி, ஆக. 04-**

விடுமுறை தினத்தையொட்டி. ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரியில் குவிந்தனர்.

உலக புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியில் தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். விடுமுறை நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வருகை தருவது வழக்கம்.

அதன்படி ஞாயிறு விடுமுறையான நேற்று அதிகாலையிலேயே ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரியில் குவிந்தனர். அவர்கள் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரை பகுதியில் திரண்டு சூரியன் உதயமான காட்சியை கண்டு ரசித்தனர். தொடர்ந்து அவர்கள் முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி பகவதி அம்மன் கோவிலில் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை படகில் சென்று சுற்றுலா பயணிகள் உற்சாகத்துடன் கண்டு களித்து வருகின்றனர். சுற்றுலா பயணிகளின் வருகையால் கன்னியாகுமரியில் காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், அரசு அருங்காட்சியகம், கலங்கரை விளக்கம், விவேகானந்தா கேந்திர வளாகத்தில் அமைந்துள்ள பாரத மாதா கோவில், ராமாயண தரிசன சித்திர கண்காட்சி கூடம், மீன்காட்சி சாலை, அரசு பழத்தோட்டம், சுற்றுச்சூழல் பூங்கா, திருப்பதி வெங்கடாசலபதி கோவில் போன்றவற்றில் அதிகாலை முதலே கூட்டம் நிரம்பி வழிகிறது.

சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக இருப்பதால் கடற்கரையில் போலீசாரும், கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும், சுற்றுலா பாதுகாவலர்களும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 04.08.2025 முதல் 10.08.2025 வரை )

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் வீட்டில் பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத் திறனும் கூடும். தள்ளிப் போன திருமண வாய்ப்புகள் தேடிவரும். இதற்கு முன் இருந்து வந்த கெடுபிடிகள் சில இடங்களில் நீங்கும். இதுநாள் வரை இருந்து வந்த பய உணர்வுகள் குறையும். பண விஷயங்களில் யாரையும் நம்பி ஏமாறாமல், மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடைகள் ஏற்படும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பணியில் இருந்து வந்த அலைச்சல்கள் குறையும்.. புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்களும் பயணத்தில் துன்பமும் ஏற்படும்.

பரணி --

இந்த வாரம் நீங்கள் தெய்வீக சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். இதுநாள் வரை இருந்து வந்த இன்னல்கள் நீங்கி, ஓரளவு, விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். ஆடை, ஆபரணங்கள் பற்றிய சிந்தனைகள் குறையும். வீட்டிலேயே இருப்பதால், மனைவியின் கைவண்ணத்தில், பிடித்தமான நல்ல உணவு கிடைக்கும். தொழில் விஷயமாக எந்தவித புதிய திட்டங்களையும் தீட்டி விடாதீர்கள். முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றிகரமாக முடியும் என்று சொல்வதற்கில்லை. தொடர் முயற்சி செய்தால், வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் தாமதமாகவே கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள், மக்களை சமூக இடைவெளி விட்டு நிறுத்தி வியாபாரம் செய்தால் இலாபம் பார்க்கலாம். ஆயினும், அரசு கெடுபிடிகள் குறையும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் வீட்டிலேயே, பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியில் செல்ல முடியாத நிலையில் வீட்டில், குடும்பத்துடன், நல்லுணவு உண்டு மகிழ்வார்கள். நல்லோர் சேர்க்கையால் எல்லாம் நல்ல விதமாக நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடைக்கு பின் முன்னேற்றம் உண்டு. சிலருக்கு, வீட்டில் பொழுதைக் கழிப்பதே கஷ்டமான வேலையா க இருக்கும். எதிர்பார்த்த இனங்களில் இருந்து தாமதமாகவே, தனவரவுகள் வந்து வந்து சேரும். பலசரக்கு மற்றும் காய்கறி வியாபாரிகளுக்கு அதிக ஆதாயம் கிடைக்கும். சுயதொழில் செய்பவர்களுக்கு சிரம்மான காலம். தயாள குணம் உள்ளவர்கள், தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து, புண்ணியம் தேடி கொள்வர். சீருடைப் பணியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து, மக்களின் பாராட்டைப் பெறுவார்கள்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் வீட்டில் நடைபெற இருந்த சுப காரியங்கள் அனைத்தும், தடை, தாமதங்களுக்குப் பிறகு, சிறப்புற, சிம்பிளாக நடக்கும். முக்கிய பணிகளில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. தீவிர முயற்சி செய்தாலும்., இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கத் தாமதமாகும். . வியாபாரத்தில் புதிய விரிவாக்கத் திட்டங்களை ஒத்திப் போடுவது நல்லது. வெளியூர்ப் பயணங்கள் எதிர்பாராத போக்குவரத்து பிரச்சனைகள் ஏற்படலாம். தாய்வழி உறவுகளால் எவ்வித உதவியும் இருக்காது. சிலருக்குக் காரியத்தடைகள், கால தாமதங்கள் காரணமாக பின்னடைவுகள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். வேலைப்பளு கூடும்.

ரோகிணி –

இந்த வாரம் தொலை தூரப் பயணங்கள் ஒத்திப் போடுவது நல்லது. வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான புதிய வழிகள் தென்படலாம். ஆனால், அது எட்டாக் கனியாக இருக்கும். இந்த நாட்களில் சீருடைப் பணியாளர்கள் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருக்காவிட்டால் விபத்தில் சிக்க நேரிடலாம். கவனம் தேவை. வேலைப்பளு காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். வீட்டிலேயே உறவுகளோடு இருப்பதால், விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம் என ஆனந்தம் பொங்கும். சிலருக்கு அஜீரண தொல்லைகள் ஏற்பட்டு மருத்துவரிடம் செல்ல நேரலாம். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாமதமாக வரும்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் பொருளாதார நிலை சீராக இருக்கும் என்று சொல்வதற்கில்லை.. சிலருக்கு வீட்டில் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களின் சூழ்நிலை காரணமாக தள்ளிப் போகலாம். போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாக பயணம் செய்ய முடியாத சூழ்நிலைகள் எழலாம். இதுநாள் வரை இருந்து வந்த பயம் மறைந்து, மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எதையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த தனவரவு ஏற்பட, சிறிது காலம் பிடிக்கும். அரசுக் கடன்கள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும். ஆனால், பாராட்டுகள் கிடைக்கும். ஊரடங்கு காரணமாக சிலருக்கு, வாகன வசதிகள் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் தடை, தாமதங்கள் ஏற்படும். அதன் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் வீட்டில், இருப்பதால், சிலருக்கு, பூஜை வழிபாடுகள் மூலம் மனக்கவலைகள் குறையும். திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை, என, தத்துவம் பேச நேரும். எண்ணிய எண்ணங்கள் ஈடேறும் என்று சொல்வதற்கு இல்லை. சாண் ஏறினால் முழம் சருக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட, தடை தாமதங்கள் தவிர்க்க முடியாததாகும். சீருடைப் பணி செய்பவர்களுக்கு சுற்று வட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும். அடிப்படை விஷயங்களில் அதிக கவனம் செலுத்தினால், நீங்கள் போட்ட திட்டங்கள் அனைத்தும் குழப்பமோ, சிக்கல்களோ இன்றி கச்சிதமாக முடிவடையும். சிலருக்குப் பணமுடைகள் ஏற்படலாம். தொழிலில் எதிர்பார்த்தபடி ஆதாயங்கள் இருக்காது. தாமதமாகும். பயணத்தின் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம்.

திருவாதிரை ---

இந்த வாரம் வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும் என்று சொல்வதற்கில்லை. எதிர்பாராதவிதமாக, சூழ்நிலை காரணமாக, தனவரவு தாமதப்படும். சுற்றத்தார் அவரவர் வீட்டில் இருப்பதால், அவர்கள் மூலமாக பணவுதவி கள் கிடைக்காது. மனமகிழ்ச்சி குறையும். வாழ்க்கையில் முன்னேற்றங்கள் காண கடின உழைப்பு தேவைப்படும். மருத்துவர்கள் புகழையும், கௌரவத்தையும் அடைவார்கள். தொலைதூரப் பயணங்கள் ஒத்திப் போடுவதால் நன்மை ஏற்படும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு, சரியான காலம் அல்ல. எந்த ஒரு காரியத்தையும், பொறுமையாக, அவசரப்படாமல், நிதானமாகச் செய்தால் அவருக்கு வெற்றி கிடைக்கும்.கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் விருந்தினர் வருகை இருக்காது. வீட்டிலேயே இருப்பதால் குடும்பத்தோடு, சந்தோஷம் பெருகும். சினிமா, மால்களில் பொழுது போக்கு போன்ற செலவுகள் அடியோடு குறையும். தந்தைவழி உறவுகளால் சிலருக்கு, வீண் தொல்லைகள் ஏற்படலாம். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி, இலாபத்தை அதிகரிக்க முயன்றாலும், தடை, தாமதங்கள் ஏற்படும். நீங்கள் அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேர காலதாமதமாகும். பல விஷயங்களில், சீருடைப் பணியாளர்களுக்கு, இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு உட்கொள்ளும் நேரம் இருக்காது. அரசு வகையில் கட்ட வேண்டிய தீர்வுகள் செலுத்துவதற்கு சலுகைகள் கிடைக்கும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் புதிய முயற்சிகள் மற்றும் முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. மருத்துவர்கள், விஞ்ஞானிகள், புதிய சாதனைகள் புரிந்து மற்றவர்களின் பாராட்டைப் பெறுவார்கள். பெண்களுடன் வாக்குவாதங்களை தவிர்க்கவும். சிலருக்கு மன சஞ்சலங்கள், அலைச்சல்களும் ஏற்படலாம். வீண் செலவுகள் அதிகரிக்கும். பின்வரும் நாட்களில் புதிய முயற்சிகள், தன வரவு அதிகரிக்க சிறிது, தாமதப்படலாம். அந்த நேரங்களில், தங்கள் சேமிப்பு, கைகொடுக்கும். கேளிக்கைகளில் ஈடுபடுதல், இனிய பயணங்கள் போவது, என எல்லாம் கனவாகவே இருக்கும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருக்கும். சிலருக்கு, நோய்நொடிகள் ஏற்பட வாய்ப்புள்ளதால், எச்சரிக்கையாக இருப்பது நல்லது, அதிகாரிகள் சந்திப்பு அனுகூலமாக இருக்கும்.

பூசம் --

இந்த வாரம் வீட்டிலேயே இருப்பதால், மீடியாக்களில், சாதுக்கள் தரிசனம் மற்றும் புண்ணிய கதைகள் கேட்டல் என பொழுது பக்தி மயமாக கழியும். வாழ்க்கையில் நீங்கள் எதிர்பார்த்தபடி முன்னேற்றங்களும், சுகானுபவங்கள் மாறுபட்ட நிலையில் இருக்கும். நினைத்தது எதுவும் நடக்காது. மருத்துவர்கள், செவிலியர்கள் தங்கள் உழைப்பால், கௌரவத்தையும், புகழும் அடைவார்கள். பொறாமை காரணமாக நண்பர்களே பகைவர் ஆவர் பிராயணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். சிலர், இடம் விட்டு இடம் மாறி வேறு இடத்தில் வாழ நேரலாம். எதிர்பார்ப்புக்கு மேல் தாராளமான பணவரவு இருக்கும் என்று சொல்வதற்கில்லை சிலருக்கு வியாபாரப் போட்டிகள் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

ஆயில்யம் –

இந்த வாரம் உங்களுக்கு பணம் சம்பாதிப்பதில் எப்போதும் இல்லாத அளவுக்கு சிரமங்கள் ஏற்படும். சுறுசுறுப்பாக பணிபுரிந்தாலும், முன்னேற்றத்தின் முட்டுக் கட்டைகள் அதிகரிக்கும். இலக்கை எட்டுவது, எட்டாக் கனியாக இருக்கும். புத்திரர்கள், சொன்னபடி கேட்காமல், தொல்லை தருவார்கள். அரசியல்வாதிகளுக்கு மக்களுக்கு, சேவை செய்யும், பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். காவல்துறை மற்றும் இராணுவப் பணியாளர்கள் பல சாகசங்களை நிகழ்த்துவர். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்த்தால் மனக் கசப்புகள் தவிர்க்கலாம். பணிபுரியும் இடத்தில் அதிகாரிகளிடம் அனுசரித்து சென்றால் முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சிலருக்கு, தொழில் முன்னேற்றம் என்பதில், இலவு காத்த கிளி போன்ற நிலை நிலவும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் வீட்டில் நிச்சயித்த சுப காரிய நிகழ்ச்சிகள் தடை, தாமதத்திற்கு பிறகு, நடக்கும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. மாணவர்களுக்கு தேர்வுகள், தள்ளி போகும். சிலருக்கு, பெண்களால் இலாபம் ஏற்படும். பொருளாதார நிலைமையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி தாமதப்படும்.

பூரம் –

இந்த வாரம் உங்கள் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும் என்று சொல்வதற்கில்லை. எதிலும், தடை, தாமதங்கள் ஏற்படும். எந்தக் காரியங்களிலும் முழுமையான ஈடுபாடு இருக்காது. வீட்டிலேயே இருப்பதால், தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் தாமதமாக வேனும், வெற்றி அடையும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் வரத் தாமதமாகும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகள் அதிகமாகும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் உடன் பிறப்புக்களின் இருந்து நீங்கள் எதிர்பார்த்த பணவுதவி கள் கிடைக்க வாய்ப்புகள் குறைவு. புதிய வீடு, பூமி வாங்க எடுக்கும் முயற்சிகளை தள்ளிப்போடுவது நல்லது. வங்கிக் கடன்கள் கிடைக்கத் தாமதமாகும். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களினாலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்தியின் குறையும் வாய்ப்பு ஏற்படலாம்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்காது. கடன் வாங்க நேரம். வீட்டில் திருமண வைபவங்கள் தடை, தாமதத்திற்கு பிறகு நடைபெறும். மாணவர்களுக்கு தேர்வுகள் தள்ளி போகும். கல்வியில் தேர்ச்சி குறையும். அனைவரும் வீட்டிலேயே இருப்பதால், குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். ஞானிகள் மற்றும் பெரியோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். பக்கத்து வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். தொழில் வாய்ப்புகள் குறையும். போக்குவரத்து இடர்பாடுகளால், புண்ணியத் தலம் தரிசனங்கள் தடைப்படும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர்.

அஸ்தம் –

இந்த வாரம் தனவரவு தாமதப்படும். செலவுகள், அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் குறையும். உறவுகள் வருகையும் குறையும். வீட்டில் இருப்பதால் சிலருக்கு உள்ளம் மகிழும். குடும்பத்துடன், ஒன்றாக, உணவருந்தி மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். சீருடைப் பணியாளர்கள், மிகப் பெரிய சாகசங்களைப் புரிவார்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். சிலருக்கு, சம்பாதிக்கும் திறன் மேம்பட்டு, மனதில் திருப்தி ஏற்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் தாமதமாகவே பதில்கள் வரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருக்கும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் இதுவரை, இருந்து வந்த இழுபறி நிலைகள் மாறி, புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருக்கவும். வாகன வசதி குறையும். சிலருக்கு, மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய கடின உழைப்பால் மட்டுமே நல்ல இலாபமோ, அதிக பலனோ கிடைக்கும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு ஏற்படும். அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். அரசு அதிகாரிகளுக்கு, அந்தஸ்தும் புகழும் உயரும். தொலை தூரத்திலிருந்து எதிர்பார்த்த, நற்செய்திகள் தாமதப்படும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் தூர தேச பயணங்கள் ஒத்திப் போடுவது நல்லது. சிலருக்கு, பணி விஷயமாக எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரும். சுபகாரியம் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமான வருவாய் பெருக்கம் ஏற்படும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அதிகாரிகளின் பணி பளு கூடும். பெரிய மனிதர்களின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள்.

சுவாதி –

இந்த வாரம் விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கும், நிலை இருக்காது. சுகமும் குறையும். பல குழப்பங்கள் நிலவும். எதிர்பாராத தனவரவுகள் குறையும். சிலர், வீட்டிலேயே இருப்பதால், மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு, வாக்கால் வருமானம் பெருகும். எண்ணிய எண்ணங்கள் யாவும் நிறைவேறும் என்று சொல்வதற்கில்லை. அரசாங்கத்தால் அடித்தள மக்களின் வாழ்வில், அனுகூலம் உண்டு. புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். கல்வியில் தடை தாமதங்கள் ஏற்படும். சிலருக்கு, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு வாகனங்களால் தொல்லை ஏற்படலாம். பிரபலமானவர்களின் அன்பும், நட்பும் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்க தாமதமாகும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் சுப காரியங்கள் தள்ளிப் போனாலும், சிம்பிளா, சிறப்பாக நடக்கும். இல்லமே விழா கோலம் பூணும், குறைந்த அளவு உறவுகளின் ஆசியோடு நடக்கும். சிலருக்கு, சமாளிக்க முடியாமல், திடீரென செலவுகள் ஏற்படும். வியாபார சம்பந்தமான முயற்சிகள் மற்றும் பயணங்களை ஒத்திவைப்பது நல்லது. அரசுப் பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடினாலும், புகழ், கௌரவம் கூடும். வீரம் பொங்கும். அவர்களின், சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டும் கிடைக்கும். சிலர் எதிர்பார்த்த பணி இடமாற்றங்கள் தாமதப்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். தொழில் வாய்ப்புகள் தள்ளிப் போகும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் நீங்கள் வீட்டிலேயே இருப்பதால், முக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு, மகிழ்ச்சி அடைவது போல், ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். எல்லா வகையிலும் சிறப்பான பலன்களைத் எதிர்பார்க்க முடியாது. சிலருக்கு உடல் பாதிப்புகள் ஏற்படலாம். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமாக கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகளை ஒத்திப் போடுவது நல்லது. அரசுப் பணியாளர்களுக்கு, வேலைப்பளு கூடினாலும், பெயரும், புகழும் கூடும். நோய் தொற்று காரணமாக, அரசு கெடுபிடிகள் இருந்தாலும், மக்கள் ஒத்துழைப்பு, அவசியமான ஒன்று. வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை பொறுமையாகக் கையாள்வது அவசியம். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள்.

அனுஷம் –

இந்த வாரம் சிலருக்கு, ஒருநாள் போவது ஒரு யுகம் போவது போல் இருக்கும். வீட்டில் இருப்பவர்களுடன், பண்டைய விளையாட்டுகளை விளையாடி மகிழ்ச்சிகரமாக பொழுதை கழிப்பீர்கள். செலவுகள் கூடும். தனவரவு தாமதப்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடினாலும். அதற்கேற்ற ஆதாயம் இருக்காது. கல்வியில் தடை, தாமதங்களுக்குப் பிறகு, தேர்ச்சி ஏற்படும். தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு, வாகன பயணங்களால் தொல்லைகள் எழும். சிலருக்கு, பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். பயணங்கள் தடைப்படும். தள்ளி வைக்க நேரும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் ஒத்திப் போடுவது நல்லது. இழப்புகளை சமாளிக்கலாம். தாமதமாகவே, வெற்றி பெறும் காலம் கனிந்து வரும்.

கேட்டை –

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் தாமதமாக, நடக்கும். சுபகாரிய நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் தள்ளிப் போகும். ஊரடங்கால் இல்லத்தில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, மகிழ்ச்சி பொங்கும். புண்ணியத் தல யாத்திரைகள் தள்ளிப் போகும். பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். சிலர் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரும். பசில நேரங்களில் சுறுசுறுப்பான நிலையும், மனோபயம் நிலவும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் சிலருக்கு, வெற்றி கிடைக்கும். கல்வியில் தடை தாமதங்கள் ஏற்படும். தேர்ச்சி ஏற்பட கடின உழைப்புத் தேவை.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் வீட்டில் இருந்து, மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றியினால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்களகரமான மன மகிழ்ச்சியும், ஆரோக்கியத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். ஆனால், இந்த முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. நீண்ட நாட்களுக்குப் பின்னர், இதுவரை இருந்து வந்த கெடுபிடிகள் ஓரளவு குறையும். பணிபுரியும் பெண்களுக்கு பணிச்சுமை கூடும். மருத்துவப் பணியாளர்கள் சேவை பாராட்டு பெறும். சிலருக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் இருந்தாலும், தாமதப்படும். வாகன வசதி குறையும். மாணவர்களுக்கு கல்வியில் தடை, தாமதத்திற்கு பிறகு, தேர்ச்சி உண்டாகும்.

பூராடம் –

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற சுப மங்கள காரியங்கள் ஊரடங்கு காரணமாக தாமதப்படும். தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். சிலருக்கு, நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். வீட்டில் இருந்தபடியே தங்கள் பணிகளை செய்யும் சூழல் சிலருக்கு ஏற்படும். வாகனங்களில் எச்சரிக்கையுடன் செல்லுங்கள். தடை தாமதங்கள் ஏற்படும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நெருங்கிய நண்பர்கள் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீடு, கடை வாடகை வசூல்கள் தாமதப்படும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்க முயன்றாலும் தாமதப்படும். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்களை தள்ளிப் போடுவது நல்லது.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் மனை, வீடு வாங்கும் செயல்பாடுகளைத் தள்ளிப் போடுவது நல்லது. சிலருக்கு, அலைச்சல்கள் அதிகரிக்கும். மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது, தங்கள் பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்திற்கு நல்லது. தொழிலில் உற்பத்தி பாதிப்புகள் ஏற்படலாம். ஆயினும், எதிர்பார்த்த இனங்களில் எடுக்கும் முயற்சிகளில் எப்படியாவது வெற்றி அடைவீர்கள். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்வு முடிவுகள் சாதகமாக இருக்கும். உல்லாசமாய் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்கள் என்ற எண்ணம் உருவாகும். அதேபோல இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. எனவே, கஷ்டங்கள் வந்தாலும் கலங்காதீர்கள்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் சிலர், இல்லத்திலேயே இருப்பதால், மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களால் மகிழ்ச்சி பொங்கும். பணவரவு ஓரளவு, அதிகரிப்பால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும் வழக்குகளில் வாய்தா ஏற்படும். அரசுப் பணியாளர்களின், அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்யும் சேவைகள் மக்களின் பாராட்டைப் பெறும். நட்பின் மூலம் ஆதாயங்கள் பெறும் நிலை உருவாகும். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் எச்சரிக்கை தேவை. தனிமைப்படுத்தல் அவசியம். தவறும் பட்சத்தில் நோய்நொடி ஏற்பட வாய்ப்புண்டு. சிலர், வெற்றியின் மகிழ்ச்சி தனை அனுபவிப்பார்கள். மாணவர்கள் தங்கள் பொன்னான நேரத்தை முகநூல் மற்றும் இணையதளங்களைப் பார்ப்பதில் வீணடிக்காமல், கருத்தோடு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். ஆயினும், தேர்வுகள் தள்ளி போகலாம்.

திருவோணம்-

இந்த வாரம் நல்லவர்களுடன் தொடர்புகள் ஏற்பட்டு, மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். போதுமான தனவரவு இருக்கும். உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். அன்பு மிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். புதுப்புது நவீன பொருட்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். ஆழ்ந்த மனக் கவலைகள் அன்பு மனைவியின் அரவணைப்பால் குறையும். குழந்தைகளின் திறமை கண்டு உங்கள் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். வியாபார விரிவாக்கத்தால் கிடைக்கும் இலாபம் சுமாரான தாக இருக்கும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் தாமதப்படும். வெளியூர் பயணங்களை தள்ளிப் போடுவது நல்லது. தொழில் வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும் என்று சொல்வதற்கில்லை. இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறுவதில் தடை, தாமதங்கள் ஏற்படும். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகள் தாமதப்படும். தொழிலில் முன்னேற்றம் காண கடுமையான உழைப்பு தேவைப்படும். மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் திறமைமிக்க செயல்பாடுகளால் அவர்களுக்கு, வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான ஆலோசனைகள் கிடைக்கும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் நெருங்கிய உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தல் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும். அன்பாகத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். நன்கு ஆராய்ந்து பங்குச்சந்தை விவகாரங்களில் ஈடுபட்டால் இழப்பைத் தவிர்க்கலாம்.

சதயம்-

இந்த வாரம் அன்னையின் அன்பும் அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும், ஆயினும், தாமதப்படும்.. அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும், ஆனால் போக்குவரத்து பிரச்சனைகளால் தள்ளிப்போகும்.. அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை போடும் படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். கல்வியில் தடை தாமதங்கள் ஏற்படும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும் என்று சொல்வதற்கில்லை. சுக சௌகரியங்கள் குறையும். சிலருக்கு, புதிய நோய்கள் தோன்றலாம். வெளிநாட்டுப் பயணங்களை தள்ளிப் போடுவது நல்லது. வாணிபத்தில் முன்னேற்றம் காண கடினமான உழைப்பு தேவைப்படும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. ஒளிமயமான எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டவும் முன் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது. கூடிய மட்டும் ஒத்திப் போடுவது நல்லது. அன்பு உறவுகளின் அருகாமை ஆனந்தம் தரும். செலவுகள் அதிகரிக்கும். பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் இருந்தாலும் தள்ளிப் போடுவது நல்லது. அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சீரான பொருளாதார உயர்வு இருக்காது. எப்போதும் மனதில் ஒரு கலக்கம் இருக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் , விருப்பங்கள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் ஓரளவு தனவரவு இருக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். நல்லவர்களுடன் ஏற்படும் தொடர்புகள் மூலம் மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். ஆழ்ந்த மனக்கவலைகள் அன்பு மனைவியின் அரவணைப்பால் குறையும். குழந்தைகளின் சேட்டை, செயல்பாடு கண்டு உங்கள் முகத்தில் புன்னகையும், மகிழ்ச்சியும் ஏற்படும். வியாபார விரிவாக்கத்தால் கிடைக்கும் இலாபம் சிறப்பானதாக இருக்கும்.

ரேவதி-

இந்த வாரம் தொழில் துறையினர் தங்கள் வளர்ச்சிக்கு அதிக மூலதனங்களை போட வேண்டியது வரும். அவர்கள் தீய நடவடிக்கைகளில் ஈடுபட வண்ணம் எச்சரிக்கையுடன் அவர்கள் கண்காணிப்பது நல்லது. பெண் பிள்ளைகளையும் அவர்கள் போக்குக்கு விட்டால் சிக்கல்கள் வரலாம். வியாபாரத்தில் அகலக்கால் வைக்காமல் அடக்கி வாசிக்க இழப்பைத் தவிர்க்கலாம். நோய் வரும்போது சுய வைத்தியம் செய்யாமல், உரிய மருத்துவரிடம் காட்டி மருத்துவம் செய்தால் வீண் விரயங்கள் இருந்து தப்பிக்கலாம்.. எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்களுக்கு கல்வியில் தடை, தாமதங்களுக்குப் பிறகு, தேர்ச்சி உண்டாகும். வீண் செலவுகளை குறைத்து பணத்தை சேமித்து வைப்பது நல்லது.



சென்னை திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி, பட்டாளம், பக்தவச்சலம் பூங்காவில் உள்ள பொது நூலகத்தை வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் "முதல்வர் படைப்பகம்" அமைப்பதற்கான பூமிபூஜையில் கலந்து கொண்டு பணிகளை நேற்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார். இதில் மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, முதன்மைச்செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மைச்செயல் அலுவலர் அ.சிவஞானம், ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழு தலைவர் சரிதா ஆகியோர் உள்ளனர்.

# 2030-க்குள் வறுமையை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை: தமிழ்நாடு அரசு

சென்னை, ஆக. 04-

2030-க்குள் வறுமையை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன் தெரிவித்துள்ளார்.

வறுமையை ஒழிப்பதை முக்கிய நோக்கமாக கொண்டு தமிழ்நாடு அரசு செயல்படுகிறது. தமிழ்நாடு சமூகநீதி மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஒருங்கிணைத்து, வறுமையை வெற்றிகரமாக குறைத்து வருகிறது.

அந்த வகையில் நிதி ஆயோக் அறிக்கையில் 'தமிழ்நாடு வறுமை இல்லை' என்ற இலக்கில் தமிழ்நாடு முதன்மையாக உள்ளது.

இதுமட்டுமல்லாமல், வறுமை ஒழிப்பில் தேசிய சராசரி மதிப்பெண் 100-க்கு 72 என்று இருக்கும் நிலையில், தமிழ்நாட்டின் மதிப்பெண் அதில் 92 என்ற அளவில் இருக்கிறது.

வறுமையை ஒழிப்பதில் நீடித்த வளர்ச்சி இலக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அந்த வகையில் அனைவருக்குமான பொது வினியோகத்திட்டம், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், கலைஞரின் கனவு இல்லத் திட்டம் ஆகிய பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தி உள்ளது.

இதுதவிர ஊக்கமளிக்கும் மகளிர் சுய உதவிக்குழுக்கள், ஒருங்கிணைந்த வாழ்வாதார மேம்பாட்டு முன்னெடுப்புகள் போன்ற முன்னோடித் திட்டங்களும் வறுமை ஒழிப்புக்கு ஒரு பாலமாக இருக்கிறது.

2030-க்குள் மக்களுக்கான நீடித்த வாழ்வாதாரங்களை மேம்படுத்தி, சுகாதார அமைப்புகள், கல்வி அமைப்புகள், சுய உதவிக்குழுக்கள் போன்ற சமூக நிறுவனங்களை வலுப்படுத்தி வறுமையை அதன் அனைத்து பரிமாணங்களிலும் முழுமையாக அறவே ஒழித்து நிலையான முன்னேற்றத்தை வழங்குவதில் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தமிழ்நாடு திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன் தன்னுடைய 'எக்ஸ்' தளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியல்

தென்காசி, ஆக. 04-

குற்றாலத்தின் அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குவிந்து ஆனந்த குளியலிட்டு வருகின்றனர்.

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் அவ்வப்போது சாரல் மழை பெய்து வருவதால் குற்றாலத்தில் உள்ள ஐந்தருவி, மெயின் அருவி, பழைய குற்றாலம், புலிஅருவி, சிற்றருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. நேற்று விடுமுறை நாள் என்பதால் அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குவிந்து ஆனந்த குளியலிட்டு வருகின்றனர்.

மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர். வெளியூர்களில் இருந்து வேன், கார் உள்ளிட்ட வாகனங்களில் வந்திருந்த சுற்றுலா பயணிகள் பலரும் பழைய குற்றாலம் முதல் மெயின் அருவி வரை செல்லும் பகுதியில் அமைந்துள்ள தனியார் தோட்ட மர நிழல்களில் உணவுகள் சமைத்து, அருவிகளில் குளித்து வருகின்றனர்.

சுற்றுலா பயணிகளின் வருகையால் அருவிக்கரைகளை ஒட்டி உள்ள கடைகளிலும் வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெற்றது. இதனால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நேரம் செல்ல செல்ல சுற்றுலா பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழகம் முழுவதும் ஆடிப்பெருக்கு கோலாகலம்:

# நீர் நிலைகளில் மக்கள் புனித நீராடி வழிபாடு

மதுரை, ஆக. 04-

ஆடிப்பெருக்கை முன்னிட்டு தமிழகம் முழுவதும் நீர் நிலைகளில் குவிந்த மக்கள் புனித நீராடி வழிபாடு செய்து கோலாகலமாக கொண்டாடினர்.

ஆடிப் பெருக்கு தினத்தில் செய்யக்கூடிய எந்தவொரு நல்ல செயலுக்கும் புண்ணியம் பெருகும். விவசாயிகள் இந்த தினத்தில் விதைகளை விதைப்பார்கள். இந்நாளில் விதைத்தால் விளைச்சல் பெரும் என்பது ஐதீகம். ஆடி 18 அன்று மகாலட்சுமியை வழிபட்டு செய்யும் செயல்கள் அனைத்தும் வெற்றி பெறும். மக்கள், குறிப்பாக புது மணத்தம்பதிகள் ஆற்றங்கரைக்கு சென்று வழிபட்டு வருகின்றனர். திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் காவிரி ஆற்றில் படையலிட்டு, காவிரி அன்னையை பெண்கள் வழிப்பட்டனர். புதிய மஞ்சள் கயிறு மாற்றி கொண்டனர். இது போல் மேட்டூர், திருநெல்வேலி தாமிரபரணி நதிக்கரைகளில் மக்கள் பூஜை செய்தனர். தம்பதிகள் மஞ்சள் கயிறு , புது தாலி மாற்றி கொண்டனர். அரிசி, பழம், பால் என படையலிட்டு பூஜை நடத்தினர்.

மதுரை மாவட்டத்தில், பக்தர்கள் கோவில்களில் தரிசனம் செய்து கோலாகலமாக கொண்டாடினர். ஆடிப்பெருக்கை முன்னிட்டு மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் தாலி பெருக்கி கட்டி புதுமணத் தம்பதிகள் சிறப்பு வழிபாடு செய்தனர். ஆடிப்பெருக்கு பண்டிகையையொட்டி, அதிகாலை முதல் பக்தர்கள் கோவிலுக்கு சென்று வழிபாடு செய்வதில் ஆர்வம்



காட்டினர். ஆடிப்பெருக்கு பண்டிகையை, தங்கள் வீடுகளில் உள்ள குடிநீர் குழாய்களிலும், சிலர் கடற்கரையிலும் கொண்டாடினர்.

காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்ததால், ஆடிப்பெருக்கு விழாவை, ஏராளமான மக்கள் உற்சாகமாக கொண்டாடினர். மாவட்டத்தில், காவிரிக்கரை அமைந்துள்ள மோகனூர், ப.வேலூர், ஜேடர்பாளையம், பள்ளிபாளையம், குமாரபாளையம் உள்ளிட்ட பகுதிகளில், ஆடிப்பெருக்கு விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. ஏராளமான பெண்கள் கருகமணி வைத்து, கன்னிமார் சுவாமிக்கு பூஜை செய்து வழிபட்டனர். மாலை, ஆற்றில் நவதானியங்களால் ஆன முளைப்பாரி விடும் நிகழ்ச்சி நடந்தது.

ஆடிப்பெருக்கு விழாவை முன்னிட்டு நெல்லை தாமிரபரணி ஆற்றில் பெண்கள், படையலிட்டுசிறப்பு வழிபாடு மேற்கொண்டனர்.

ஆடி மாதம் 18ம் தேதி ஆடிப்பெருக்கு அம்மனுக்கு உகந்த மாதமாக ஆடி மாதமாக போற்றப்படுகிறது. ஆடி மாதம் அன்று பெண்கள் நதிக்கரையில் அம்மனுக்கு படையிட்டு வணங்குகின்றனர்.

காவிரியில் நடப்பதைப் போலவே நெல்லையிலும் தீராநதி தாமிரபரணிக்கரையில் ஆடிப்பெருக்கு நெல்லை குறுக்குத்துறையில் தாமிரபரணிக்கரையில் அமைந்துள்ள சுப்பிரமணியசுவாமிகோயில் படித்துறையில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டனர்.

திருமணமாகாத பெண்களுக்கு திருமணம் நடக்க வேண்டியும், திருமணமான பெண்களுக்கு தாலிபாக்கியம் நிலைக்கவும், விவசாயிகளுக்கு மகசூல் பெருகி வாழ்வு செழிக்கவும், குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும் ஆடிப்பெருக்கு அன்று வழிபடுகிறார்கள். பல வகையான பொருட்களை வைத்தும் படைத்தனர். பெண்கள் தாலிச்சரடை மாற்றிக் கொண்டனர். ஆடிப்பெருக்கையொட்டி தாமிரபரணி ஆற்றுப்பகுதியில் பல்வேறு இடங்களிலும் இந்த வழிபாடு நடந்தது.

கடலூர் பகுதியை சேர்ந்த புதுமண தம்பதிகள், பொது மக்கள் ஏராளமானோர் கடலூர் சில்வர் கடற்கரையில் கூடினர். வாழை இலையில் அரிசி, வெல்லம், பொறி, பழங்களை வைத்து இயற்கையை வழிபட்டனர். பின்னர் சுமங்கலி பெண்கள் புதிதாக தாலி கயிறுகளை மாற்றினர். புதுமண தம்பதிகள் இயற்கையை வழிபட்டு தங்கள் திருமண மாலைகளை நீரில் விட்டனர். இதே போல் தென்பெண்ணை ஆறு உள்ளிட்ட பல்வேறு ஆற்றில் புதுமணத் தம்பதியினர் வந்து, படையிலிட்டும் வழிபாட்டில் ஈடுபட்டு திருமண மாலையை ஆற்றில் விட்டனர். இது போல சிதம்பரம் அருகே வல்லம் படுகை கொள்ளிடம் ஆற்றுப் பகுதியில் புதுமண தம்பதியினர் பொதுமக்கள் குவிந்தனர்.



திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பணகுடியில் அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி மேற்கொண்டுள்ள "மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்" எனும் பிரம்மாண்ட பிரச்சார பயணம் நேற்று நடைபெற்றது. இதில் நெல்லை புறநகர் மாவட்ட செயலாளர் இசக்கி சுப்பையா, அ.தி.மு.க. வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஐ.எஸ்.இன்பதுரை எம்.பி., அ.தி.மு.க. மருத்துவ அணி இணைச்செயலாளர் டாக்டர் பா.சரவணன் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தீரன் சின்னமலை 220-வது நினைவு நாள்:

# அ.தி.மு.க. நிர்வாகிகள் மரியாதை

சென்னை, ஆக. 04-

விடுதலைப்போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 220வது நினைவு நாளை முன்னிட்டு. சென்னை, ஈரோடு ஓடாநிலை, சேலம் சங்ககிரி ஆகிய இடங்களில் உள்ள அவரின் திருவுருவ சிலை மற்றும் படத்துக்கு அ.தி.மு.க. நிர்வாகிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.



இதுகுறித்து அ.தி.மு.க. சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், 'சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 220ஆவது நினைவு நாளான இன்று (நேற்று) காலை 10 மணியளவில், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் ஆணைப்படி, சென்னை கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள தீரன் சின்னமலை திருஉருவச் சிலைக்கும்; அங்கே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருஉருவப் படத்திற்கும், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பொன்னையன் தலைமையில், முன்னாள் மத்திய அமைச்சர் தம்பிதுரை, முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், கோகுல இந்திரா, பென்ஜமின், சின்னையா, அப்துல் ரஹீம்,

அண்ணா தொழிற்சங்கப் பேரவைச் செயலாளர் ஆர். கமலக்கண்ணன், கழக அமைப்புச் செயலாளர் ஆதி ராஜாராம், அண்ணா தொழிற் சங்கப் பேரவைத் தலைவர் தாடி ம. ராசு, கழக அமைப்புச் செயலாளர் ராயபுரம் மனோ, கழக அமைப்புச் செயலாளர் திருவேற்காடு பா. சீனிவாசன், தென் சென்னை தெற்கு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் விருகை ரவி, வட சென்னை வடக்கு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் புரசை பாபு, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் விஜயகுமார், கழக புரட்சித் தலைவி பேரவை இணைச் செயலாளர் ஜெயவர்தன் உள்ளிட்டோர் மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தினார்கள்.

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் ஓடாநிலையில் அமைந்திருக்கும் தீரன் சின்னமலை அவர்களுடைய மணிமண்டபத்தில் உள்ள அவரது திருஉருவச் சிலைக்கும்; அங்கே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருஉருவப் படத்திற்கும், முன்னாள் அமைச்சர்கள் செங்கோட்டையன், வேலுமணி, கருப்பணன், கே.வி.இராமலிங்கம் உள்ளிட்டோர் மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தினார்கள்.

சேலம் மாவட்டம், சங்ககிரி மலைக்கோட்டை அடிவாரத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தீரன் சின்னமலை அவர்களுடைய திருவுருவப்படத்திற்கும்; சங்ககிரி ஈரோடு பிரிவு சாலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை அவர்களுடைய நினைவுச் சின்னத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருஉருவப் படத்திற்கும் முன்னாள் அமைச்சர்கள் தங்கமணி, செம்மலை, சரோஜா, சேலம் புறநகர் மாவட்டக் கழகச் செயலாளர் இளங்கோவன் மற்றும் பா.ஜ.க. தேசிய மகளிர் அணித் தலைவர் வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தினார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மதுரை மாநகருக்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமிக்கு எழுச்சிமிகு வரவேற்பு அளிப்பது குறித்து மாநகர் மாவட்ட மாணவரணி சார்பில் அதன் மாவட்ட செயலாளர் ஏ.பார்த்திபன் தலைமையிலும், மாநில மாணவரணி இணை செயலாளர் பா.குமார் முன்னிலையிலும் செல்லூரில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பேராசிரியர் ஜெயபால், ஆர்.பாஸ்கரன், கவுன்சிலர் ஏ.மாயத்தேவன், ஓட்டுரணி திருமுருகன், மார்க்கெட் மார்நாடு, கவிச்செல்வம், திடீர்நகர் பாலா, யோகேஸ்வரன், விக்ரம், டேவிட் ரவி, வக்கீல் சிவா, பாரதிராஜா, ரத்தீஸ், மெடிக்கல் ரமேஷ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.